வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 03.11.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 307 | பக்கங்கள் : 16

# ராஜபக்ஷக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை!

## கனேடிய கொன்சவேட்டிவ் தலைவர் வலியுறுத்தல்




ஒட்டாவா, நவம்பர் 03

தமிழர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் மீறல்களுக்கு எதிராகத் தாம் குரலெழுப்பவேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ள கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர், ராஜபக்ஷாக்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

15



## தமிழ் அரசின் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 03

நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுக் காலை வெளியிடப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர்.ப.சத்தியலிங்கத்திடம்

15

## 3 மாதங்களில் ஆட்சி கவிழும் என பகல் கனவு காண்கின்றார் ரணில்!

### சாடுகின்றார் விஜித ஹேரத்

கொழும்பு, நவ. 03

இந்த ஆட்சி மூன்று மாதங்களுக்குள் கவிழும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு கண்டுகொண்டிருக்கின்றார் - என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15

## பொதுக்கூட்டத்தில் பங்கேற்க முல்லை. வருகிறார் பிரதமர்!

முல்லைத்தீவு, நவ. 03

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய நிகழ்வாக, 'நாட்டைக் கட்டியெழுப்பும், நாம் ஒன்றாக திசைகாட்டிக்கு' எனும் கருப்பொருளில் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் சிறப்பு அதிதியாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து கொள்வார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பில் உள்ள பஸ் தரிப்பிடம் நிகழ்வுக்கான முக்கிய இடமாகத் தெரிவு

15

## பிரான்ஸ்க்கு அனுப்புவதாக கூறி கோடிக்கணக்கான ரூபா மோசடி!

### யாழில் வசமாக சிக்கினார் ஒருவர்

யாழ்ப்பாணம், நவ. 02

பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்புவதாக கூறி கோடிக் கணக்கில் மோசடி செய்த நபர் ஒருவர் 7 வருடங்களுக்கு மேல் தலைமறைவாக இருந்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரியபண்டாரவின் கீழ் இயங்கும்

15




## ஜனாதிபதிக்கு குண்டு துளைக்காத வாகனம்!

கொழும்பு, நவ. 03

பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு குண்டு துளைக்காத வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பு மற்றும்

15







## யாழ் - கொழும்பு கடுகதி ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, நவ. 03

கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசன்துறைக்கு இடையில் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கடுகதி ரயில் சேவை முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த ரயில் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க காலை 5.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் கடுகதி ரயில் முற்பகல் 11.38 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தை அடையும். தொடர்ந்து மதியம் 12.30 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் கடுகதி ரயில் இரவு 7.19 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை அடையும். முதல் வகுப்பு பெட்டிகளைக் கொண்ட இந்த ரயில் பயணத்திற்கான கட்டணம் 3,200 ரூபா என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சொத்துகள் தொடர்பில் முறையிட அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

கொழும்பு, நவ. 03

**அரசாங்கத்துக்குச் சொந்தமான சொத்துகளைச் சட்ட விரோத மாகப் பயன்படுத்துதல், கடத்திச் செல்லல் அல்லது மறைத்து வைத்திருத்தல் என்பன தொடர்பில் முறையிட 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.**

1997 என்ற அவசர தொலைபேசி இலக்கமானது 24 மணி நேரமும் சேவையில் இருக்கும்.

இந்த நிலையில், அவசர தொலைபேசி இலக்கத்தின் மூலம் பொலிஸ் அதிகாரிகளால் இடம்பெறும் மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல் குற்றங்களையும் முறையிட முடியும்.

மேலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு இடம்பெறும் பல்வேறு துஷ்பிரயோகங்கள், மோசடிகள் மற்றும் தொந்தரவுகள் தொடர்பில் முறையிடுவதற்கும் இந்த அவசர தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்த முடியும்.

போதைப்பொருள் குற்றங்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் பாதாள உலகக் கும்பலின் செயல்பாடுகள் தொடர்பில் முறையிடுவதற்கு 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கம் கடந்த ஜூலை மாதம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த சில நாட்களாக சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டுள்ள அரச வாகனங்கள் தொடர்பில் முறையிடுவதற்கும் இந்த அவசர தொலைபேசி இலக்கம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தகவல் வழங்குபவர்கள் அடையாளம் மற்றும் தனிப்பட்ட விவரங்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)



# சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று சிரமதான பணிகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 03

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவு பணிகள் நேற்று சனிக்கிழமை நடைபெற்றன.

எதிர்வரும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் போராடி உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் மாவீரர் நினைவு வாரம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதற்கமைய தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவால் வேலணை சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவு பணிகள் நேற்று நடைபெற்றன.

சிரமதானப் பணிக்கு முன்னதாக பொது சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நடைபெற்றது. தொடர்ந்து, மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்று சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (ஐ-01)

# 503 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைச் செலுத்தியது இலங்கை

கொழும்பு, நவ. 03

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 503 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடனை இலங்கை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில், 275.1 மில்லியன் டொலர்கள் முதன்மைக் கடன் திருப்பிச் செலுத்துதலாகவும், 227.9 மில்லியன் டொலர்கள் வட்டித் தொகையாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, 2024 ஜூன் மாத இறுதிக்குள், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் அளவு 37. 5 பில்லியன் டொலர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இடைக்காலக் கொள்கைக்கு இணங்க, பாதிக்கப்பட்ட இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளின் வெளிநாட்டுக் கடன் சேவை 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை செலுத்தப்படாத கடன் தவணைகளின் தொகை 5,670 மில்லியன் டொலர்களாகவும், வட்டித் தொகை 2,527 மில்லியன் டொலர்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிதியமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழ்ப்பாணத்தில் ரயில் மோதி மாற்றுத்திறனாளி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணத்தில் ரயில் மோதி தூக்கி வீசப்பட்டதில் மாற்றுத்திறனாளியான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். சுண்டுக்குழியைச் சேர்ந்த அருளானந்தன் யேசுதாஸன் (வயது - 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபருக்கு வாய்பேச முடியாது என்பதுடன் கேட்டல் திறனும் இல்லை. இந்த நிலையில் இவர் நேற்று முன்தினம் கச்சேரி வீதியில் உள்ள ரயில் கடவையை கடக்க முற்பட்டவேளை ரயில் மோதி தூக்கி வீசப்பட்டார். இதனால் சம்பவ இடத்திலேயே அவர் பலியானார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-05)

# மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான பணிகள் ஆரம்பம்



மல்லாவி, நவ. 03

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் தினத்தை முன்னிட்டு முன்னாயத்த பணிகளின் ஆரம்பமாக மல்லாவி ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றைய தினம் சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆலங்குளம் மாவீரர் பணிக் குழுவால் முறைமைப்படுத்தப்பட்ட வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த சிரமதானப் பணிகளில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (எ)

# சுழிபுரத்தில் கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 03

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - வறுத்தோலை பகுதியில் நேற்றைய தினம் ஒரு போத்தல் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சுற்றுலாவிகளின் வருகை 16 இலட்சத்தைக் கடந்தது

கொழும்பு, நவ. 03

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கைக்கு வருகைத் தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இதன்படி, நாட்டை வந்தடைந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்து ஆயிரத்து 949 ஆகும் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# வினாத்தாள் வங்கியை நிறுவ நாட்டில் புதிய வேலைத்திட்டம்

## பரீட்சைகள் ஆணையாளர் தகவல்

கொழும்பு, நவ. 03

பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே கசிவதைத் தடுக்கும் வகையில் வினாத்தாள் வங்கியை நிறுவுவதற்கான புதிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டுக்குள் வினாத்தாள் வங்கியை நிறுவ முடியும் என்றும், இதனால் வினாத்தாள்கள் முன்கூட்டியே கசிவதை தடுக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய வேலைத்திட்டத்தின் கீழ் பரீட்சை வினாத்தாள்கள் தனிநபர்களின் கைகளுக்குச் செல்லாமல் கணினி மூலம் தயாரிக்கும் பணியை மேற்கொள்வதன் மூலம் வினாத்தாள்களை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்றும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

தற்போது பரீட்சைக்கு முன்னர் பரீட்சை வினாத்தாள்களை விட்டுச் செல்வது ஒரு பிரச்னையாக மாறியுள்ளதாகவும், தனிநபர்கள் மீதான நம்பிக்கை காரணமாக இந்தத் தவறு நேர்ந்துள்ளதாகவும், அது பரீட்சை முறையின் பிரச்னை அல்ல.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை போன்றவற்றை நடத்துவதில், பரீட்சை வினாத்தாள்கள் கசிவது கடந்த காலங்களில் பிரச்னையாக இருந்தது.

இந்தப் பிரச்னையை முடிவுக்கு கொண்டுவர தேவையான தொழில்நுட்பம் தற்போது உள்ளதாகவும், அந்தத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வினாத்தாள் வங்கி உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அறுகம்குடா தாக்குதல் திட்டம் தொடர்பில் மாலைதீவு பிரஜை உட்பட 6 பேர் கைது

கொழும்பு, நவ. 03

அம்பாறை, அறுகம்குடா பிரதேசத்தில் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்ட சம்பவம் தொடர்பில் மாலைதீவு பிரஜை உட்பட 6 பேர் பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கையிலுள்ள இஸ்... லியர்களை இலக்கு வைத்து அறுகம்குடா பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக அமெரிக்கத் தூதரகத்துக்கு அண்மையில் தகவல் கிடைத்திருந்தது.

இந்த விவகாரம் நாடளாவிய ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுடன் இணையும் தமிழ் அரசுக் கட்சி வெளிவிவகார அமைச்சராக சுமந்திரன்!

## ஜனாதிபதி அநுர இணக்கம் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, நவ. 03

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய மக்கள் சக்தியுடன் இணையும். எம். ஏ. சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சு பதவி வழங்கப்படும் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

சமஷ்டி ஆட்சி முறைமையிலான புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கும் ஜனாதிபதி அநுரகுமார, தமிழ்த் தரப்புக்கு உத்தரவாதமளித்துள்ளார். எனவே, நாட்டுக்கு எதிரான இச்செயல்பாடுகளுக்கு இடமளிக்க முடியுமா? என்றும் கம்மன்பில கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் நடைபெற்ற சர்வஜன சக்தியின் தொகுதி அமைப்பாளர்களுடனான கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"தமிழ் அரசுக் கட்சி அரசாங்கத்துடன் ஒன்றிணைவது அவர்களின் அரசியல் உரிமை. அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் என்ன என்பதை ஆராய வேண்டும்.

ஒற்றையாட்சி முறைமையிலான அரசமைப்பை நீக்கி, சமஷ்டி ஆட்சி முறைமையிலான புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுக்கொண்ட 30 .1 தீர்மானத்தை மீள அமுல்படுத்த வேண்டும் என்ற இரண்டு பிரதான நிபந்தனைகளை தமிழ் அரசுக் கட்சி



விதித்துள்ளது. இவ்விரு நிபந்தனைகளையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

அத்தோடு, சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சு பதவியை வழங்குவதில் தனிப்பட்ட ரீதியில் எனக்கு எவ்வித எதிர்ப்பும் கிடையாது. ஆனால், அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்த கூடாது"- என்றார். (எ)

# வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 17 முறைப்பாடுகள்

## தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

வவுனியா, நவ. 03

வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தெரிவத்தாட்சி அலுவலரும் வவுனியா அரச அதிபருமான பி. ஏ. சரத்சந்திர தெரிவித்தார்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தலா எட்டு முறைப்பாடுகளும் முல்லைத்தீவில் ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளது. அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளன.

அத்துடன் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வன்னி மாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அந்த வகையில் வவுனியாவில் 182, மன்னாரில் 98, முல்லைத்தீவில்137 நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, வவுனியாவில் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக சைவப் பிரகாசா மகளிர் கல்லூரியும், மன்னார் மாவட்



டத்தில் மாவட்டச் செயலகமும், முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலமும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாக செயல்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வன்னி தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் 3 இலட்சத்து 6081 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அந்தவகையில் வவுனியாவில் ஒரு இலட்சத்து 28585 பேரும் முல்லைத்தீவில் 86 ஆயிரத்து 889 பேரும் மன்னாரில் 90 ஆயிரத்து 607 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்- என்றார். (எ)

# எல்பிட்டி தேர்தல் முடிவுகள் அபாயகர முன்னறிவிப்பு!

## ஹிருணிகா சொல்கிறார்



கொழும்பு, நவ. 03

எல்பிட்டி தேர்தல் முடிவுகள் அபாயகரமான நிலைமைக்கான ஒரு முன்னறிவிப்பாகும். தற்போதைய அரசாங்கத்துக்கு இது ஒரு சிறந்த முன்னறிவிப்பு இல்லை என்பது மாத்திரம் தெளிவாகிறது- இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் உறுப்பினராக இருந்த போது கூறிய விடயங்களை நடைமுறைப்படுத் துவது எந்தளவு கடினமானது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தற்போது புரிந்து கொண்டிருப்பார் என்றும் ஹிருணிகா கூறினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எரிபொருள் விலைகள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளிட்டவை தொடர்பிலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அவை எவற்றையும் தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான அறிக்கையை வெளியிடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த அரசாங்கம் எவ்வாறு பயணிக்கின்றது என்பதும் இரகசியமானதாகவே உள்ளது. அதனையும் அநுர அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்- என்றார். (எ)

# வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகம் அடுத்த மாதம் முதல் வழமைக்கு வரும்

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்

கொழும்பு, நவ. 03

50, 000 வெற்று வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, அடுத்த மாதம் முதல் கடவுச்சீட்டு விநியோகம் வழமைக்கு திரும்பும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த தொகைக்கு மேலதிகமாக இந்த மாதம் நடுப்பகுதியில் மேலும் 100,000 வெற்றுக் கடவுச்சீட்டுகளும், டிசெம்பர் மாதம் மேலும் 150,000 வெற்றுக் கடவுச்சீட்டுகளும் கிடைக்கப் பெறவுள்ளன. அத்துடன் 750,000 வெற்றுக் கடவுச்சீட்டுகள் எதிர்வரும் மாதமளவில் கிடைக்கப் பெறவுள்ளன.

அத்துடன் மேலதிகமாக வெற்றுக் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில் ஒரு நாளைக்கு சுமார் 1600 கடவுச்சீட்டுகள் விண்ணப்பதாரர்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற நிலையில், இந்த தொகையை எதிர்வரும் மாதம் முதல் அதிகரிப்பதற்கான இயலுமை காணப்படுகிறது.

முறையான வழிமுறைக்கு அமைய நிகழ்நிலை முறைமை ஊடாக விண்ணப்பதாரர்கள் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நேரம் மற்றும் திகதியை ஒதுக்கிக் கொள்வதற்கு தொழில்நுட்ப ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# லொஹான் மருத்துவமனையில்

கொழும்பு, நவ. 03

வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு காரை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலை மருத்துவமனை மாற்றப்பட்டுள்ளார்.

மிரிஹான பொலிஸாரால் லொஹான் ரத்வத்த கடந்த 31ஆம் திகதி கண்டி கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், நுகேகொடை பதில் நீதிவான்,



லொஹான் ரத்வத்த சிகிச்சைக்காக சிறைச்சாலை மருத்துவமனைக்கு செல்ல அனுமதி வழங்கியுள்ளார். (எ)

# மின்சக்தி - வலுசக்தி துறையை டிஜிற்றல் மயமாக்க உதவுங்கள்

## இந்திய உயர்ஸ்தானிகரிடம் ஜனாதிபதி அநுர கோரிக்கை

கொழும்பு, நவ. 03

இலங்கையில் மின்சக்தி மற்றும் வலுசக்தி துறையின் மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்திய உதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது விரிவான மீளாய்வு செய்யப்பட்டதுடன், அந்தத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாட்டு மீனவ சமூகங்களின் தேவைகளைப் புரிந்துக் கொண்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் மூலம் நீண்டகால தீர்வை எட்டுவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு கடல் பிரதேசத்தில் நிலவும் மீன்பிடி பிரச்சனைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையின் சமூகத்தின் நலன்களை பாதுகாப்பதில் தான் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி அநுர, இந்திய உயர்ஸ்தானிகரிடம் குறிப்பிட்டார்.

இலங்கையில் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையின் மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# தொழிலாளர்களின் பதிவு இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 03

லெபனானுக்கு வேலைக்குச் செல்லும் இலங்கைத் தொழிலாளர்களின் பதிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அந்த நாட்டில் நிலவும் முரண்பாடுகள் தீர்க்கப்படும் வரை அந்த நாட்டுக்கான பணியாளர்களை பதிவு செய்யப்போவதில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் பிரியந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

சுமார் 7,400 இலங்கையர்கள் தற்போது லெபனானில் பணியாற்றி வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13 நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

## தென்னிலங்கையரிடம் சித்தார்த்தன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவ. 03

**காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தம்மை சந்தித்த தென்னிலங்கையின் அரச சார்பற்ற நிறுவனத்தினரிடம் வலியுறுத்தினார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன்.**

எஃப்றோல் நிறுவனத்தினர் சித்தார்த்தனை அவரின் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது, 13ஆவது சீர்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்தும், அதனை நிறைவேற்றுவதில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சித்தார்த்தன் தமது நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தினார்.

13ஆவது சீர்திருத்தமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

வடக்கில் வீதிகளையும், காணிகளையும் விடுவிப்பதாக கூறுகின்றனர். ஆனால், சில பகுதிகள் மாத்திரமே விடுவிக்கப்படுகின்றன. பெரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன. அந்தப் பகுதிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

நாங்கள் தேசிய கட்சியுடன் இணைந்து செயல்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. ஆனால், அவர்களுடன் இணைந்து செயல்படுவதற்கு ஏற்ப சூழ்நிலைகள் அந்த கட்சிகளுக்குள் காணப்படவில்லை.

தமிழ் பௌத்தமானது தமிழ் பௌத்தமாகவே பேணப்பட்டிருந்தால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் பௌத்தர்களும் இருந்திருப்பார்கள். தமிழ் பௌத்த தொல்லியல் சின்னங்களும் பாதுகாக்கப்பட்டிருக்கும். ஆனால், தொல்லியல் திணைக்களமானது மக்களது காணிகளை அபகரிக்கும் ஒரு நிலையிலேயே காணப்படுகிறது. ஆகையால் தமிழ் பௌத்த சின்னங்கள்கூட அழிவடையக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது - என்று கூறினார்.

(ஐ-05)

# இல்லாத ஒன்றுக்கு கனவு காண்பதைவிட யதார்த்தமானதை அடைவதே சிறந்தது!

## வடமராட்சியில் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 03

மக்களுடன் தொடர்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற- மக்களிக்காக உழைக்கின்ற தரப்பினரையே மக்கள் இம்முறை தமது அரசியல் பிரதிநிதிகளாக தீர்மானிப்பர் என சுட்டிக்காட்டியுள்ள ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இல்லாத ஒன்றுக்காக கனவு காண்பதை விட யதார்த்த மானதை அடைய முயற்சிப்பதே சிறந்தது எனவும் வலியுறுத்தினார்.

வடமராட்சி பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நேற்று சென்றிருந்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மக்களுடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

நான் மக்கள் நலனில் இருந்தே செயற்பட்டு வருகின்றேன். ஆனால் அன்று எமது தமிழ் அரசியல் முன்னோர்கள் சமஷ்டி என்ற கோரிக்கையை முன் வைத்து மேடைகளில் முழங்கி தேர்தல் வெற்றிகளை பெற்று பாராளுமன்றை அலங்கரித்தினர்.

ஆனால் அவர்கள் தாம் முன் வைத்த விடயத்தின் இலக்கை அடையச் செய்வதற்கான பொறிமுறையை துளியளவும் கொண்டிருக்கவில்லை. அதேபோன்று தான் அவர்கள் வழி வந்து போலித் தேசியம் பேசும் இன்றைய அரசியல் பரப்பில் உள்ளவர்கள் கூறிக்கொண்டிருக்கும் கொள்கைகளுக்கும் பொறிமுறையற்றதாக இருக்கின்றன.



நான் ஏனைய தமிழ் அரசியல் தரப்பினரை போன்று பாராளுமன்றை அலங்கரிக்க 23 ஆசனங்களை கேட்கவில்லை. குறைந்தது 4 முதல் 5 ஆசனங்களையே எனக்கு தாருங்கள் என கோருகின்றேன்.

எனது மக்கள் மீதான எனக்குள்ள உணர்வுகளே இன்று வரை பாராளுமன்றில் என்னை பிரதிநிதியாகவும் வைத்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாது மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. இதுவே இன்று வெற்றி பெற்றுள்ளது- என்றார்.

(அ-05)

# புலிகளைத் தோற்கடித்ததை போன்று தமிழரசையும் தோற்கடிக்க திட்டமா?

## முடியவே முடியாது என்கிறார் ஜெயசிறில்



அம்பாறை, நவ. 03

மகிந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒன்பது நாடுகளுடன் இணைந்து தோற்கடித்ததை போன்று தமிழரசுக் கட்சியையும் திட்டம் போட்டு வலுவிழக்க இம்முறையும் சதி நடக்கிறது. ஆனால் இம் முறை அது நடக்காது. முடியவே முடியாது. நாம் நிச்சயமாக வெல்கிறோம். இது சவால் என இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

காரைதீவு விளையாட்டு கழகம் நடத்திய கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்படுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிவடையச் செய்த அதாவுல்லாவை வெற்றி பெறச் செய்வதற்குமாகவே கருணா அம்மானை அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட செய்வதற்கு கொண்டு வந்தார்கள்.

காரைதீவு மண்ணின் மைந்தர் அமரத்துவமடைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் எமக்கு மீனைக் கொடுக்காமல் தூண்டிலை மாத்திரம் தந்து விட்டு சென்றுள்ளார். அதன் அடிப்படையில் நாங்கள் அபிலாஷைகளையும் அபிவிருத்திகளையும் அடைந்து வருகின்றோம். எமக்கு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையை எமது 12 கிராம பிரிவுகளோடு மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி ஆகிய ஊர்களையும் உள்ளடக்கி அமைத்துத் தந்து காரைதீவான் என்று சொல்வதற்கு ஒரு பலத்தை தந்து சென்றுள்ளார்.

அதற்குப் பிறகு வந்த எந்த ஒரு அம்பாறை மாவட்ட தமிழ் அரசியல்வாதிகளுமே உருப்படியாக நிலையான அபிவிருத்தியோ நிலையான தீர்வோ எமக்கு பெற்றுத் தரவில்லை.

பொய் வாக்குறுதிகள் மட்டுமே தந்துள்ளனர்.

தொடர்ச்சியாக எதிர்பரசியல் செய்து இன்னும் எமது மாவட்டத்தை படுகுழிக்குள் தள்ளாமல் எமது பலத்தை பயன்படுத்தி ஊழலற்ற அரசாங்கத்துடன் இணைந்து நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபட உள்ளேன். -என்றார்.

# கூட்டமைப்பை அழித்ததை தவிர வேறு எதையும் செய்யவில்லை!

## மணிவண்ணன் பகிரங்க குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 03

தமிழ்த் தேசியம் என்று பேசுவார்கள். ஆனால், விடுதலைப் புலிகளின் முழுமையான ஆதரவுடன் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அழித்ததை தவிர வேறு எந்த உரிமைகளையும் வென்றெடுக்கவில்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

சுழிபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்களுடைய வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்றவர்களை இரண்டு வகையாக பிரித்துக் கொள்ள முடியும். தமிழ்த் தேசிய அரசியலை நாங்கள் முன்னெடுக்கப் போகின்றோம், எங்களுடைய மாவீரர்களின் கனவுகளை நாங்கள் சுமந்து செல்லப் போகின்றோம், அந்த விடுதலையை வென்றெடுக்கப் போகின்றோம் என ஒரு தரப்பு பாராளுமன்றம் சென்றது.

15 ஆண்டுகளாக நாங்கள் தமிழ்த் தேசியம் வேண்டும் என்று நாங்கள் வாக்களித்துக் கொண்டிருந்தோம். ஆனால், எதனை இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு சென்று சாதித்தார்கள் என்பதை நீங்கள் அவர்களிடம் கேட்க வேண்டும்.



2001ஆம் ஆண்டு எங்களுடைய தலைவரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அது இன்று இந்த தேர்தல் பரப்பிலேயே இல்லாமல் அழிக்கப்பட்டிருக்கிறது. இதுவா தமிழ்த் தேசியத்தை வென்றெடுக்கின்ற தரப்புகளின் சாதனை.

எங்களுடைய தேசிய காட்சிகள் எனக் கூறியவர்கள் இன்று எங்களைப் பிரித்து, அழித்து நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ள அவல நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியம் பேசி சமஷ்டியை பெற முடியவில்லை. ஆகக் குறைந்தது மாகாண சபையின் காலம் முடிந்த பின்னர் அதனை நடத்துவதற்கு கூட இந்த அரசியல் தலைவர்களிடம் வக்கில்லாமல் காணப்பட்டது.

தமிழ்த் தேசியம் தமிழ்த் தேசியம் எனக்கூறி எதையுமே சாதிக்காமல் மீண்டும் ஒரு தடவை எங்களுக்கு ஆணை தாருங்கள் என உங்கள் முன் வந்திருக்கின்றார்கள். நாங்கள் இன்னும் ஒரு ஐந்து வருடங்கள் அவர்களுக்கு ஆணை கொடுத்தால் தமது கட்சி பிரச்னையை நீதிமன்றத்தில் வழக்காடி தீர்த்துக் கொள்ள முயல்வார்களே தவிர, தமிழ் மக்களுடைய பிரச்னைகளை தீர்ப்பதற்கு அவர்கள் முயற்சி செய்யப் போவதில்லை என மணிவண்ணன் மேலும் தெரிவித்தார்.

(எ-05)

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ். நகரில் நேற்று தேர்தல் பிரசாரம்

யாழ்ப்பாணம், நவ. 03

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ் நகரர் பகுதியில் நேற்று காலை பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரத்தில் ஈடுபட்டது.

இதன்போது யாழ் மத்திய பஸ் நிலைய பகுதியில் துண்டுப் பிரசுர விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்கள் துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டனர். துண்டுப்பிரசுர விநியோகத்தில் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
03.11.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஐப்பசி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மனநிலையில் மாற்றம் தேவை

பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஆதரவை தேசிய மக்கள் சக்தி நாடப்போவதாகவும் தமிழரசு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கப்போவதாகவும் வெளியான செய்திகளை தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் கலாநிதி நிஹால் அபேசிங்க மறுத்திருக்கிறார்.

தமிழ் அரசு கட்சியின் ஆதரவை பெறுவது குறித்து தேசிய மக்கள் சக்திக்குள் கலந்தாலோசனை எதுவும் இடம்பெறவில்லை என்று கூறியிருக்கும் அவர் சகல மாவட்டங்களிலும் தங்களது கட்சி வேட்பாளர்களை நிறுத்தியிருப்பதாகவும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ் அரசு கட்சியின் ஆதரவை நாடுவதற்கான அவசியம் எதுவும் தங்களுக்கு கிடையாது என்பது அவரது நிலைப்பாடு.

அதேவேளை, நியாயம் இருக்கிறதோ இல்லையோ பிரச்னைகள் குறித்து சர்ச்சைகளை கிளப்பி விளம்பரத்தை தேடும் சுபாவத்தை தேடும் தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ஒருவரான உதய கம்மன்பில தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு வெளியுறவு அமைச்சு பதவியைக் கொடுப்பதற்கு தேசிய மக்கள் சக்தி இணங்கியிருப்பதாக தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கூறியதாகவும் செய்தி வெளியாகியது.

இந்த விவகாரங்கள் குறித்து யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் மாநாட்டில் கருத்துக் கூறிய சுமந்திரன், அமைச்சு ஒன்றை பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டால் அது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்பது தனது அபிப்பிராயம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் தேசிய இனப் பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படும் வரை மத்திய அரசாங்கத்தில் இணையக்கூடாது என்றும் அபிப்பிரயாங்கள் இருக்கின்றன. ஆனால், அது தமிழ் அரசு கட்சியின் கொள்கை அல்ல. 1965ஆம் ஆண்டில் தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சர் பதவிகளை வகித்தார்கள். காலம் மாறும்போது சூழ்நிலையும் மாறுகிறது" என்றும் சுமந்திரன் கூறினார்.

தேர்தலுக்கு பிறகு அரசாங்கத்தை அமைப்பதற்கு தேவையான அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்காவிட்டால் தேசிய மக்கள் சக்தி தமிழ் அரசு கட்சியின் ஆதரவை நாடுமா இல்லையா என்பதை விடவும் அவ்வாறு அரசாங்கத்தை அமைக்க உதவக்கூடிய அளவுக்கு தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் போதுமான ஆசனங்களை கைப்பற்றுமா என்பதே முக்கியமான கேள்வி.

வடக்கு, கிழக்கில் முன்னென்றும் இல்லாத வகையில் இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் பெருவாரியான தமிழ் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுவதால் தங்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவம் சிதறுப்படப்போகிறது என்று தமிழ் மக்கள் கவலையடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தமிழ் கட்சியும் ஓரிரு ஆசனங்களுடன் பாராளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பே இருக்கிறது.

தமிழ் அரசு கட்சிக்குள் நிலவும் உட்பூசல்கள் அதன் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை எந்தளவுக்கு பாதிக்கப் போகிறது என்பது இன்னொரு முக்கியமான கேள்வி. தமிழ் அரசு கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று சனிக்கிழமை யாழ்.நகர் தந்தை செல்வா கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்ட வைபவத்தில் அந்த கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட தலைமை வேட்பாளரே கலந்துகொள்ளவில்லை. இந்த இலட்சணத்தில் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவைக் கொடுப் பது குறித்து பேசுவதற்கு என்ன இருக்கிறது?

மத்திய அரசாங்கத்தில் இணைவதையும் அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொள்வதையும் தமிழ்க் கட்சிகள் பொதுவில் ஓர் இனத்துரோகச் செயல் என்றே கருதுகின்றன. அவ்வாறு அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் 'துரோகிகள்' பட்டியலில் சேர்க்கப்படுவது ஒரு தமிழ் அரசியல் கலாசாரமாகவே வளர்க்கப்பட்டு விட்டது. இதில் இருந்து விடுபடுவது அல்லது மாற்றுவழி குறித்து சிந்திப்பது தமிழ் அரசியல்வாதிகளுக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும் கூட கஷ்டமாகவே இருக்கிறது.

தென்னிலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் தமிழர்களின் பிரச்னைக்கான தீர்வு குறித்து நம்பிக்கை தரக்கூடிய அறிகுறி எதையும் காண்பிக்கவில்லை என்பது உண்மை. ஆனால், புதிய சூழ்நிலையை எவ்வாறு தமிழ் மக்களின் நலன்களுக்கு வாய்ப்பாக பயன்படுத்துவது குறித்து சிந்திப்பதை தவறு என்று கூறமுடியாது.

மத்திய அரசாங்கத்திடம் இருந்து தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தமிழ் மக்களுக்கும் உரிமை இருக்கிறது. அவ்வாறு பெறுகின்ற சேவையை அல்லது உதவியை அரசாங்கம் எறியும் 'எலும்புத்துண்டாக' நோக்கும் மனநிலையில் இருந்து தமிழர்கள் மாறவேண்டும். இனமானம், சுயமரியாதை பற்றி பேசுகின்ற எத்தனையோ தமிழ் அரசியல்வாதிகள் ஆட்சியாளர்களிடம் அந்தரங்கமாக பேசி தங்களுக்கு தேவையானதை பெற்றுக்கொள்வதில் எந்த அசௌரியத்தையும் உணருவதாக இல்லையே!

# புதிய நியமனங்கள் வழங்க முன் அறிவிக்க வேண்டியது அவசியம்

## அனைத்து நிறுவன தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தல்

கொழும்பு, நவ. 03

நிறுவனங்களில் புதிய நியமனங்கள் மற்றும் பணி இடமாற்றங்களை செய்வதற்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும் என்று அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



தேர்தல் காலத்தில் பல்வேறு அரச நிறுவனங்களில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் அல்லது பணிப்பாளரை நியமிப்பதற்குத் தேவை ஏற்பட்டால் அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

மேலும், தேர்தல் நடவடிக்கையை பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் புதிய நியமனங்கள் மற்றும் பணி இடமாற்றங்கள் தேர்தல் சட்டத்துக்கு எதிரானது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ)

# வெள்ளை சீனி, பாசிப் பயறு உள்ளிட்ட சில பொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, நவ. 03

லங்கா ச. தொ. ச. நிறுவனம் நவம்பர் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் சில பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ பாசிப் பயறின் விலை 799 ரூபாயாகவும், ஒரு கிலோ வெள்ளை கௌபியின் விலை 880 ரூபாயாகவும், ஒரு கிலோ வெள்ளை சீனியின் விலை 243 ரூபாயாகவும் குறைவடைந்துள்ளது.

மேலும், அனைத்து ச. தொ. ச. பல்பொருள் நிலையங்களிலும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை 300 ரூபாய்க்கு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ச. தொ. ச. நிறுவனம் அறிவித்துள்ளது.

# தேர்தல் கால முறைப்பாடுகளில் 1,018 முறைப்பாடுகளுக்குத் தீர்வு

கொழும்பு, நவ. 03

இம்முறை பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,259 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 123 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் வன்முறை தொடர்பில் 13 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும் 1,259 முறைப்பாடுகளில் 1,018 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (எ)


# மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

காலி, நவ. 03

காலி கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள் 24 மணித்தியாலங்கள் அடையாள பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மருத்துவமனையின் சில மருத்துவர்களுக்கு மருத்துவர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் பொருளாளர் உபய பண்டார தெரிவித்தார். (எ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையை எளிதாக்குவோம்!

கிருஷ்ணன்



குறைந்த பட்சத் தேவைகளுடன் வாழ்தல் என்ற வகை யிலான 'மினிமலிஸம்' எனப்படும் வாழ்வியலை, இப்போது ஐரோப்பா அமெரிக்கா போன்ற நாடுகளில் பரப்பி வருகிறார்கள். உலக அளவில் நிறையப் பேரை இந்தக் கொள்கை கவர்ந்து வருகிறது.

உண்மையில் இந்தச் சிந்தனை முதலில் தோன்றியது பாரத தேசத்தில்தான். இந்தக் கொள்கையின் அடிப்படையில் குடிலில் எளிய வாழ்க்கை வாழ்ந்த முனிவர்கள்தான் நம் முன்னோர். மினிமலிஸ கொள்கையின் அடிப்படை வேறேதும் அல்ல, காந்தியம்தான்.

ஒரு சிறிய பென்சிலைக் கூட அதன் இறுதிப் பயன்பாடு வரை உபயோகித்தால், இன்னொரு பென்சிலை அவசரமாக வாங்க வேண்டிய தேவை இராது என்பது காந்தியத் தத்துவம்.

அந்தப் பென்சிலை அதன் இறுதிப் பயன்பாடு வரை உபயோகிப்பதே அதைத் தயாரித்தவர்களுக்கு நாம் செய்யும் நியாயம் என்பதும் காந்தியக் கருத்து. இதுவே மினிமலிஸத்தின் குறிக்கோளும் கூட.

மினிமலிஸம் என்பது, 'ஒருவன் தனக்குத் தேவையான குறைந்தபட்சப் பொருட்களை மட்டும் தேவையான அளவில் வைத்துக்கொண்டு வாழுதல்' எனப் பொருள்படுகிறது.

உதாரணமாக, ஏழு ஆடைகள் இருந்தால் ஒரு வாரத்தைக் கழிக்கலாம். அதிகபட்சம் பதினான்கு ஆடைகள் இருந்தால் போதும். ஒவ்வொரு வார இறுதியிலும் ஏழு ஆடைகளைத் துவைத்து வைத்துக் கொண்டால் ஆடைப் பிரச்னையே இராது.

இந்த அடிப்படை ஆடைகள் மட்டுமில்லாமல், பெரும் நிகழ்ச்சிகளுக்குச் செல்ல ஒன்று அல்லது இரண்டு உயர்ந்த ரக ஆடைகளும் இரவைக் கழிக்க இரண்டு மிகச் சாதாரணமான ஆடைகளும் வைத்திருந்தால் போதுமானது.

ஆனால் நம் வீட்டு அலமாரியைத் திறந்து பாருங்கள். ஒருமுறை மட்டுமே உடுத்திய எத்தனை ஆடைகள் அதில் குவிந்து கிடக்கின்றன!

திருமணங்களில் மிகுந்த விலை கொடுத்து பெண்ணுக்கு எடுக்கப்படும் மிகப் பகட்டான சேலையையோ, மாப்பிள்ளைக்கு வரவேற்பு நிகழ்ச்சிக்கு எடுக்கப்படும் ஆடம்பரமான உடையையோ வாழ்நாளில் பெரும்பாலும் அதன் பிறகு அவர்கள் பயன்படுத்துவதே இல்லை! அல்லது பயன்படுத்தினாலும் மிகச் சொற்பத் தடவைகள் தான் பயன்படுத்துவார்கள்.

'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்கிறது தமிழ். நாம் வாழ்நாள் முழுதும் உடுத்தும் துணியின் முழக் கணக்கை எண்ணிப் பார்த்தால் தலைசுற்றும்!

ஒரு பெல்ட், ஒரு ஜோடி செருப்பு, ஒரு ஜோடி ஷூ என்று வைத்துக் கொண்டால் போதுமே? இது போன்றவற்றை அளவுகடந்த எண்ணிக்கையில் வைத்திருப்பதால் என்ன பயன்?

அவற்றைப் பராமரிப்பதும் கடினம். அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அவற்றை வைக்க இடம் கண்டுபிடிப்பதும் கடினம்.

முன்பெல்லாம் கடைகள் மிகவும் குறைவு. அவையும் வீட்டைவிட்டு வெகு தொலைவில் இருக்கும். அதனால் அவசரத்திற்குத் தேவைப்படுமே என்று நிறைய மளிகைப் பொருட்களை வாங்கிச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. இப்போதோ வீடுகளின் அருகே கடைகள் என்பது கூட அல்ல, கடைகளின் நடுவேதான் வீடுகளே இருக்கின்றன.

எப்போது வேண்டுமானாலும் அருகேயுள்ள கடைகளில் தேவையான மளிகைப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கும்போது ஏராளமான பொருட்களை வாங்கிச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன?

'இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம், தள்ளுபடி விற்பனை' போன்ற வியாபாரக் கவர்ச்சிகளில் மயங்கி வீடு

(14ம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 03.11.2024 - 09.11.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 17

நல்ல நேரம்: 07.31 - 09.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : துவிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் மகிழ்ச்சி மிக்க வாரம். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். நல்ல யோக பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கும். கவர்ச்சிகரமான ஆடம்பரப் பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். தொலை தூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன் பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். ஆக்கபூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் கையில் பணமும் மனதில் மகிழ்ச்சியும் பொங்கி வழியும். எதையும் சாதிக்கும் திறனும், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் உங்களுக்கு வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும். குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றலென வீசும். மணமேடை ஏறும் மாங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளைச் செல்வம், துள்ளி விளையாடும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி வேகம் பிறக்கும். அதன் காரணமாக லாபமும் அதிகரிக்கும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங் கள் ஏற்படும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பார்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் பொருளாதார நிலையும் சீராகும். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழுக்கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிசெய்யும் ஆற்றலை நிரூபிக்க அநுராவுக்கு அவகாசம் தேவை!



வீரகத்தி தனபாலசிங்கம்

தங்களது தவறான ஆட்சிமுறையினதும் பொருளாதார முகாமைத்துவத்தினதும் விளைவாக தோன்றிய முன்னென்றுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் ராஜபக்சாக்கள் இரு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் தன்னந்தனியான உறுப்பினராக இருந்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆட்சிப்பொறுப்பைக் கையளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது வழமையான அரசியல் போக்கில் இருந்து ஒரு விலகலாகும். அவ்வாறு அடிக்கடி நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனால், இலங்கையின் பொருளாதார நெருக்கடி அண்மைய எதிர்காலத்தில் முடிவுக்கு வரப்போவதில்லை என்று நம்பும் முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க தேசிய மக்கள் சக்தியின் தலைவரான ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவும் கூட நாட்டை ஆட்சி செய்ய முடியாமல்போகும் பட்சத்தில் தன்னை மீண்டும் ஆட்சியை பொறுப்பேற்குமாறு கேட்கக்கூடும் என்ற ஒரு மாயையில் இருக்கிறார் போன்று தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பிறகு பதவியில் இருந்து இறங்கிய விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதி திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தபோது, 'நாமிருவரும் அன்பாக நேசிக்கின்ற இலங்கை என்ற குழந்தையை உங்களிடம் ஒப்படைக்கிறேன். கடந்த இரு வருடங்களாக ஆபத்தான கயிற்றுப் பாலத்தின் மேலாக நீண்ட தூரம் இந்த குழந்தையை பாதுகாப்பாக தூக்கிக் கொண்டு வந்து வந்திருக்கிறேன். என்னையும் விட கூடுதலானளவு பாதுகாப்பாக குழந்தையை பாலத்தின் ஊடாக சுமந்து அடுத்த கரைக்கு கொண்டு போய்ச் சேர்ப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறினார்.

ஆனால், ஜனாதிபதி திசாநாயக்கவினால் அந்த குழந்தையை அடுத்த கரைக்கு பாதுகாப்பாக தூக்கிக் கொண்டு செல்ல முடியாமல் போகலாம் என்று ஒரு மாதத்துக்குள்ளாகவே முன்னாள் ஜனாதிபதி முடிவுக்கு வந்துவிட்டார் போன்று தெரிகிறது.

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் விக்கிரமசிங்க தன்னை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்த பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் ஒன்று சேர்ந்து அமைத்த புதிய ஜனநாயக முன்னணிக்காக தீவிரமாக பிரசாரத்தில் இறங்கியிருக்கிறார். தேர்தல் தோல்விகளினால் துவண்டுபோகாதவர் என்று பெயர் எடுத்த அவர் தனது நிருவாகத்தில் முக்கியமான பதவிகளை வகித்தவர்கள் பொருளாதார விவகாரங்களை கையாளுவதற்கு அடுத்த பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியது அவசியம் என்று கூறிவருகிறார்.

அது மாத்திரமல்ல, நான்கு வருடங்களுக்கு பிறகு வெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்தத் தொடங்கும்போது அரச வருவாயை அதிகரிப்பதில் சமாளிக்க முடியாத சவாலை ஜனாதிபதி திசாநாயக்க எதிநோக்கப் போகிறார் என்று அபாய அறிவிப்பு செய்யும் முன்னாள் ஜனாதிபதி புதிய ஜனாதிபதி தனது முழு பதவிக்காலத்துக்கும் பதவியில் இருக்கக் கூடியதாக இருக்கும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டார். திசாநாயக்க தனது பதவியில் ஐந்து வருடங்களுக்கு நீடிக்கமாட்டார் என்ற எண்ணம் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டிருப்பதனால்தான் அவ்வாறு கூறுகிறார் என்று தோன்றுகிறது.

ஆட்சிமுறை அனுபவம் இல்லாத தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் வேண்டுமானால் அரசாங்க நிருவாகம் மற்றும் பொருளாதார விவகாரங்களில் தன்னிடம் ஆலோசனைகளைப் பெறலாம் என்ற தோரணையில் விக்கிரமசிங்க அடிக்கடி கருத்துக்களை வெளியிடுகிறார்.


அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு தனது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியபோது உகந்த நடைமுறைகள் கடைப் பிடிக்கப்படவில்லை என்று புதிய பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்த கருத்துக்கு பதிலளித்த விக்கிரமசிங்க வேண்டுமானால் அவருக்கு அரசியலமைப்பை கற்றுக்கொடுக்க தயாராக இருப்பதாகவும் கூறினார். ஆனால், 17 தடவைகள் மக்களினால் நிராகரிக்கப்பட்ட அவரிடமிருந்து ஒருபோதும் ஆலோசைகைளைப் பெறப்போவதில்லை என்று பிரதமர் அவமதிப்பாக பதிலளித்திருக்கிறார்.

அதேவேளை, தன்னால் நாட்டை ஆட்சிசெய்ய முடியாமல்போகும் என்று நினைத்தால் இரு வருடங்களில் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிவிடப்போவதாக திசாநாயக்க எங்கோ கூறியதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டும் ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகள் தேவை ஏற்படுமானால் அரசாங்கத்தை பொறுப்பேற்பதற்கு பாராளுமன்றத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் இருப்பது அவசியம் என்று கூறி தங்களுக்கு வாக்களிக்குமாறு மக்களை கேட்கிறார்கள் . தற்போதைய அரசாங்கம் பயணிக்கும் பாதையை நோக்கும்போது எதிர்க்கட்சியில் இருந்து நாளடைவில் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடியதாக இருக்கும் என்று விக்கிரமசிங்கவும் கடந்த வாரம் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கூறினார்.

தங்களுக்கு அமோகமாக வாக்களித்து அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆணையைத் தருமாறுதான் எதிர்க்கட்சிகள் தேர்தல் பிரசாரங்களில் மக்களை கேட்பது உலக வழமை. ஆனால் இலங்கையின் தற்போதைய எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் பலம்பொருந்திய எதிர்க்கட்சியாக செயற்படுவதற்கு தங்களை தெரிவு செய்யுமாறு கேட்கும் ஒரு விசித்திரமான போக்கை காண்கிறோம்.

விக்கிரமசிங்கவை மீண்டும் தீவிர அரசியலுக்கு கொண்டு வருவது குறித்து எந்த பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியை நடத்தமுடியாமல்போகும் பட்சத்தில் விக்கிரமசிங்கவின் சேவையை மக்கள் விரும்பக்கூடும் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவரும் முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய உறவினருமான ருவான் விஜேவர்தன கடந்த வாரம் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருந்தார்.

பொருளாதார முனையில் பெரும் நெருக்கடியை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்நோக்குகிறது என்று குறிப்பிட்ட விஜேவர்தன, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்குமாறு விக்கிரமசிங்கவை மக்கள் கேட்கக்கூடும் என்றும் கூறினார்.



முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவும் பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதால் மக்கள் விக்கிரமசிங்கவை நோக்கி திரும்பக்கூடும் என்று கடந்தவாரம் கொழும்பில் செய்தியாளர்கள் மகநாட்டில் கூறினார். புதிய ஜனநாயக முன்னணி கண்டியில் நடத்திய மக்கள் சந்திப்பு ஒன்றில் 'எழுதி வைத்துக் கொள்ளுங்கள் இன்னூம் ஆறு மாதங்களில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வருவார்' என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரான் அநுராத ஜெயரத்ன கூறினார்.

பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது எந்த அரசாங்கமும் பதவி விலகி ஆட்சிப் பொறுப்பை உடடினயாகவே ஒப்படைக்கக்கூடிய ஒருவராக இவர்கள் எல்லோரும் விக்கிரமசிங்கவை காட்சிப்படுத்தி தங்களுக்கு வாக்கு கேட்கும் புதுமையான ஒரு நிலைவரத்தை காண்கிறோம்.

புதிய பாராளுமன்றத்தில் 'விளையாட்டைக் காட்டுவதற்கு' தங்களுக்கு நாற்பது ஆசனங்கள் மாத்திரமே தேவை என்றும் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்றுக் கொண்டு தேவை ஏற்படுமேயானால் அரசாங்கத்தைப் பொறுப்பேற்பதே தங்களது நோக்கம் என்றும் புதிய ஜனநாயக முன்னணியின் சில அரசியல்வாதிகள் தேர்தல் மேடைகளில் வெளிப்படையாகப் பேசுகிறார்கள்.

ராஜபக்சாக்கள் விக்கிரமசிங்கவிடம் ஆட்சிப்பொறுப்பை கையளித்த ஒரு அரிதான அரசியல் நிகழ்வை வைத்துக்கொண்டு மீண்டும் அவ்வாறு இடம்பெற முடியும் என்ற கற்பனையில் தங்களது அரசியல் வியூகங்களை இந்த அரசியல்வாதிகள் அப்பாவித்தனமாக வகுக்கிறார்கள். தேசிய மக்கள் சக்தியினால் ஐந்து வருடங்களுக்கு முழுமையாக ஆட்சி செய்ய முடியாது என்ற தங்களது மனதுக்கு பிடித்த விருப்பத்தின் அடிப்படையில் மாத்திரம் இவர்கள் சிந்தனையை பறக்கவிட்டிருக்கிறார்கள்.

பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் அரசியலுக்கு புதியவர்கள் என்பதால் நாடு எதிர்நோக்கும் பாரதூரமான பொருளாதாரப் பிரச்சினையை கையாளுவதற்கு அனுபவமுடையவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு மக்களை கேட்கும் இந்த எதிரணி அரசியல்வாதிகள் கடந்த காலத்தில் தவறான முறையில் ஆட்சி நடத்திய ஜனாதிபதிகளுக்கு உறுதுணையாகச் செயல்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் புதியவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டாம் என்று மக்களை கேட்கின்ற அதேவேளை ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் பாராளுமன்றத்தை தங்களது கட்சியின் பிரதிநிதிகளினால் நிரப்புமாறு அறைகூவல் விடுக்கிறார்கள். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியே தேவையில்லை என்பது அவர்களது நிலைப்பாடாக இருக்கிறது.

பாராளுமன்ற தேர்தலில் வாக்களிப்பு தினமான நவம்பர் 14 ஆம் திகதியை புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக பாராளுமன்றத்தை துப்புரவு செய்யும் சிரமதான தினம் என்று ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் ஜனாதிபதி கூறுகிறார். எதிர்க்கட்சியே தேவையில்லை என்ற அவரின் கருத்து உண்மையில் ஜனநாயக விரோதமானது.

ஆனால் தேசிய மக்கள் சக்தி மிகப்பெரிய வெற்றியை பெறாமல் இருப்பதை உறுதிசெய்யும் நோக்கில் திசாநாயக்கவின் ஒரு மாத கால நிருவாகத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். அடுத்த பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையைக் கொண்டுவரப்போவதாக கூட உதய கம்மன்பில் கூறுகிறார். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு கொடுப்பது ஆபத்தானது என்று மக்களை அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற தேர்தலின் முடிவுகள் எவ்வாறு அமையலாம் என்று மதிப்பிடு செய்யும் எதிரணி அரசியல்வாதிகள் தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுவது சாத்தியமில்லை என்றும் ஒரு 'தொங்கு" பாராளுமன்றமே தெரிவாகும் என்றும் கூறுகிறார்கள். அண்மையில் நடைபெற்ற எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கும் ஏனைய கட்சிகள் சகலதிற்கும் தலா 15 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றதை தங்களது வாதத்திற்கு சான்றாக அவர்கள் முன்வைக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பலம்பொருந்திய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒன்றை அமைக்க ஆணை தருமாறு ஜனாதிபதி திசாநாயக்க மக்களை கேட்கிறார். ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் கட்சிக்கே பாராளுமன்ற தேர்தலில் மக்கள் பெருமளவில் ஆதரவை வழங்குவதே இதுகாலவரையான அரசியல் போக்காக இருந்து வந்திருக்கிறது.

இந்த தடவையும் அதுவும் குறிப்பாக பழைய பிரதான அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களை நிராகரித்து திசாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்கள் அந்த போக்கில் இருந்து மாறுபடுவதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. புதிய ஜனாதிபதி தனது நிலையை வலுப்படுத்தி ஆட்சியை தொடருவதற்கு மக்கள் வாய்ப்பைக் கொடுப்பார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

ஆனால் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் திசாநாயக்கவின் அரசாங்கம் நின்று பிடிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று அபாயச்சங்கு ஊதிக் கொண்டிருக்கிறாகள். அவர் தற்போது அமைத்திருப்பது மூன்று அமைச்சர்களைக் கொண்ட ஒரு இடைக்கால அல்லது காபந்து அரசாங்கமேயாகும். அதுவே உலகில் மிகவும் சிறிய அமைச்சரவையாகும். அவரைப் போன்று பதவிக்கு வந்த ஒரு மாதகாலத்திற்குள் பெருமளவுக்கு எதிர்மறையான விமர்சனங்களுக்கும் அரசியல் நெருக்குதல்களுக்கும் முகங்கொடுத்த அனுபவம் வேறு எந்த முன்னாள் ஜனாதிபதிக்கும் ஏற்பட்டதில்லை.

பொருட்களை பெறுவதற்கு மக்கள் நீண்டவ்ரிசைகளில் காத்துநிற்கும் யுகம் மீண்டும் விரைவில் தோன்றப் போகிறது என்றும் இஸ்ரேலியர்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்துவதற்கு தீட்டப்பட்டதாக கூறப்படும் திட்டம் காரணமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்படப்போகிறது என்றும் பூச்சாண்டி காட்டும் வேலைகளில் எதிர்க்கட்சிகள் இறங்கியிருக்கின்றன.

தனது அரசாங்கம் பலவீனமானதாக இருப்பதாக முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு தேர்தல் பிரசாரங்களில் பதிலளிக்கும் ஜனாதிபதி திசாநாயக்க ஒரு சில நிறுவனங்களில் மாத்திரமே தாங்கள் இதுவரையில் அதிகாரத்தை உறுதிப் படுத்தியிருப்பதாக கூறியிருக்கிறார்.

'ஜனாதிபதி பதவி, அமைச்சரவை, பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு நிறுவனங்களில் உறுதியான அதிகாரம் உறுதிப்படுத்தப்படும் போதுதான் அரசியல் அதிகாரம் நிலை நிறுத்தப்படும். தற்போது ஜனாதிபதியுடன் மிகவும் சிறிய அமைச்சரவையே இருக்கிறது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது. மாகாணசபைகள் பல வருடங்களாக இயங்கவில்லை. நாம் பதவிக்கு வந்து ஒரு மாதத்துக்கும் சற்று கூடுதலான காலமே கடந்திருக்கிறது. சில ஊடக நிறுவனங்களும் அரசியல்வாதிகளும் எம்மிடம் பலம்பொருந்திய அரசியல் அதிகாரம் இல்லாத

(15ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு முக்கியமான சவாலை கையாளும் ஜனாதிபதி



கலாநிதி ஜெகான் பெரேரா

பொருளாதாரத்தை கையாளுகின்ற விடயமாக இருந்தலென்ன, பயண அறிவுறுதல்கள் அல்லது நல்லிணக்கச் செயன்முறையைக் கையாளுகின்ற விடயமாக இருந்தலென்ன அரசாங்கம் அதன் நடவடிக்கைகளில் மிகவும் அறிவார்ந்த முறையில் செயல்படுகின்றது. அதன் விளைவான பயனையும் அனுபவிக்கிறது. அதிகாரத்தில் ஒரு மாதகாலம் இருந்த பிறகு அரசாங்கத்தின் மக்கள் செல்வாக்கு தொடர்ந்து அதிகரிக்கின்றது என்பதன் அறிகுறியே தெற்கில் எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் அதற்கு கிடைத்த வெற்றியாகும். அந்த செல்வாக்கு அதிகரிப்பு ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல் தேசிய மக்கள் சக்திக்கும் விரிவடைகிறது.

இந்த தடவை தேசிய மக்கள் சக்தியின் வெற்றியின் வித்தியாசம் கடந்த தடவை அது இத்தகைய உள்ளூராட்சி தேர்தலை எதிர்நோக்கியபோது காணப்பட்ட வித்தியாசத்தையும் விட மிகவும் பெரிதாக இருக்கிறது. முன்னர் 2019 ஆம் ஆண்டில் எல்பிட்டிய பிரதேச சபைக்கு நடைபெற்ற தேர்தலில் அதற்கு இரு ஆசனங்களே கிடைத்தன. இப்போது 15 ஆசங்களை அது கைப்பற்றியிருக்கிறது. அப்போது ஆறு சதவீத வாக்குகளை மாத்திரமே பெற்ற தேசிய மக்கள் சக்தி இப்போது 48 சதவீதமான வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரின் வெற்றிக்கு பிறகு தொடர்ந்தும் அதற்கு வாக்களிப்பதே தங்களுக்கு நன்மை பயக்கும் என்ற வாக்காளர்களின் கணிப்பீட்டின் விளைவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி வித்தியாசத்தின் அதிகரிப்பாகும். புதிய அரசாங்கம் அதன் பணிகளை உருப்படியான முறையில் செய்கிறது என்ற பொதுவான திருப்தியின் விளைவாகவும் இந்த வெற்றி அமைகிறது.

படுமோசமான பொருளாதார நெருக்கடியின்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய அதே பொருளாதாரக் குழுவையே புதிய அரசாங்கம் தொடர்ந்தும் வைத்திருப்பது மிகவும் அறிவார்ந்த ஒரு அணுகுமுறையாகும். அந்த குழு சர்வதேச நாணய நிதியத்தினதும் அதன் சர்வதேச ஆதரவாளர்களினதும் நம்பிக்கையைப் பெற்றதாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் முரண்பாடு ஏற்படக்கூடும் என்றும் அதன் விளைவாக மீண்டும் நாடு பொருளாதார குழப்பநிலையை எதிர்நோக்கவேண்டி வரலாம் என்றும் வெளியிடப்பட்ட அச்சத்தை அரசாங்கம் அதன் அணுகுமுறையின் மூலமாக பொய்யாக்கியிருக்கிறது. இலங்கையில் முதலீடு செய்வதற்கு சர்வதேச சமூகம் அதன் திருப்தியை வெளியிட்டிருக்கிறது. இலங்கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பதினொரு திட்டங்களை ஜப்பான் மீண்டும் ஆரம்பித்திருப்பதன் மூலம் இதை தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

புலனாய்வு அறிக்கைகளுக்கு பிறகு பயங்கரவாத அச்சுறுத்தல் ஒன்று தொடர்பாக அமெரிக்கா மற்றும் பல்வேறு மேற்குலக நாடுகளினால் வெளியிடப்பட்ட பயண அறிவுறுத்தல்களை அடுத்து தோன்றிய எதிர்பாராத சவாலையும் அரசாங்கம் தகுதிவாய்ந்த முறையில் கையாண்டிருக்கிறது. 'அறுகம்பேயில் பிரபல்யமான சுற்றுலா பகுதிகளை இலக்கு வைத்து தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிடப்படுவதாக தூதரகத்துக்கு நம்பகமான தகவல்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

இந்த அச்சுறுத்தலினால் தோன்றியிருக்கும் பாரதூரமான ஆபத்தின் விளைவாக தூதரக அதிகாரிகள் அறுகம்பே பிரதேசத்துக்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக நடைமுறைக்கு வரும் இந்த தடை மறு அறிவித்தல்வரை தொடர்ந்து நீடிக்கும். மறு அறிவித்தல்வரை அறுகம்பேக்கு செல்வதை தவிர்க்குமாறு அமெரிக்க பிரஜைகள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள் " என்று அமெரிக்க தூதரகத்தின் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதை தொடர்ந்து இஸ்ரேலிய அரசாங்கமும் இலங்கையில் இருக்கும் அதன் பிரஜைகளுக்கு தனியான அறிவுறுத்தலை வெளியிட்டு நாட்டை விட்டு வெளியேறுமாறு அல்லது கூடுதல் பாதுகாப்புடைய கொழும்புக்கு நகருமாறு வலியுறுத்தியது. இஸ்ரேலிய சுற்றுலா பயணிகளுக்கு எதிராக வன்முறை மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியம் இருப்பதை இது வெளிக்காட்டியது.

இஸ்ரேலிய சுற்றுலா பயணிகளில் சிலர் தங்களது விசா காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியிருந்து கிழக்கு பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். பாரம்பரியமாக முஸ்லிம்களை பெரும்பான்மையாக வாழும் அந்த பகுதியில் இஸ்ரேலியர்கள் பிரார்த்தனை மண்டபங்களையும் நிர்மாணித்திருக்கிறார்கள். வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை உச்சமாக இருக்கும் ஒரு நேரத்தில் பயண அறிவுறுத்தல்களை வெளியிட்ட தூதரகங்களை குற்றஞ்சாட்டுவதற்கு பதிலாக அரசாங்கம் எந்த ஆரவாரமும் இன்றி தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்காள்வதில் அதன் பணியை முறையாக செய்திருக்கிறது.

**அறிவார்ந்த சிந்தனை**

அண்மைய எச்சரிக்கைகளை தொடர்ந்து பயங்கரவாத அச்சுறுத்தல் தகுதிவாய்ந்த முறையில் கையாளப்பட்டிருப்பதாக தோன்றுகின்ற அதேவேளை, கிழக்கிலும் நாட்டின் வேறு பகுதிகளிலும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளினால் நடத்தப்படுவதாக கூறப்படும் பதிவுசெய்யப்படாத -- ஒழுங்கமைக்கப்படாத வரத்தக நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியதும் முக்கியமானதாகும்.



'மாகாணசபை முறையின் நோக்கம் உள்ளூரில் மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளே தீர்மானங்களை எடுப்பதற்கு அனுமதிப்பதேயாகும். மாகாணசபை முறைக்கு புத்துயிர் கொடுத்து நிதி மற்றும் நிர்வாக சுயாட்சியுடன மாகாணங்களுக்கு அதிகாரமளித்தால் இலங்கையின் ஆட்சிமுறை புதிய யுகமொன்றுக்குள் பிரவேசிக்கமுடியும்.'

இஸ்ரேலியர்கள் மாத்திரமல்ல, வேறு பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் தங்களது விசா காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியிருந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் அவர்கள் பணத்தை வெளிநாடுக்களுக்கு அனுப்புவதற்கு வசதியாக வெளிநாட்டு வங்கி கணக்குகளையும் வெளிநாட்டு கடன் அட்டை இயந்திரங்களையும் வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் வெளிநாட்டு நாணயங்களில் பணப்பரிமாற்றத்தைச் செய்வதற்கான வசதிகளையும் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய ஒழுங்கமைக்கப்படாத வர்த்தக நடவடிக்கைகள் உள்நாட்டு சுற்றுலாத் தொழில்துறைக்கு பாரிய அச்சுறுத்தலை தோற்றுவிக்கிறது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக புதிய அரசாங்கம் எந்த விதமான அரசியல் அனுசரணையும் காட்டாமல் நிதித்துறை மற்றும் குடிவரவுத்துறையுடன் சேர்ந்து உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பெருமளவில் முஸ்லிம் சனத்தொகை ஒன்று வாழ்கின்ற இலங்கையின் கிழக்கில் பள்ளிவாசல்களுக்கு அண்மையாக யூதவழிபாட்டு தலங்களை அமைப்பது குறிப்பாக, அண்மைக்கால உலகளாவிய பதற்றங்களுக்கு மத்தியில் சிலரால் உண்மையில் ஒரு ஆக்கிரமிப்பாக அல்லது ஆத்திரமூட்டும் செயலாக கருதப்படலாம். உள்ளூர் முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால், அந்த பகுதிகளில் உள்ள உள்ளூர் சனத்தொகையின் பிரதிபலிப்பு அறிவுபூர்வமானதாக - நிதானமானதாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. பாதிக்கப்பட்ட பகுதிகளின் மக்கள் இஸ்ரேலியர்களினாலும் ஏனைய சுற்றுலா பயணிகளினாலும் கொண்டுவரப்படுகின்ற வர்த்தகங்களை வரவேற்றிருப்பதுடன் அவற்றை ஆபத்தாக பார்க்கவுமில்லை. 2022 பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு நாடுபூராவும் மக்கள் குறிப்பாக பொருளாதார விவகாரங்களில் அறிவுபூர்வமாகவும் பெருமளவில் உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்காத முறையிலும் நடந்துகொள்கிறார்கள்.

இதே போன்ற ஒரு தோற்றப்பாட்டை நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த இளைஞர் யுவதிகள் கலந்துகொண்ட அண்மைய கருத்தரங்கு ஒன்றிலும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அவர்கள் சகல இன, மத சமூகங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மற்றைய சமூகங்களை அல்லது மதங்களை பரஸ்பரம் சந்தேகத்துடன் அல்லது அவநம்பிக்கையுடன் அவர்கள் நோக்கவில்லை என்பது அவர்களுக்கு இடையிலான ஊடாட்டங்களின் முக்கியமான அம்சமாகும்.

இலங்கைச் சமூகத்தின பன்முகத்தன்மையை சுற்றியுள்ள பிரச்சினைகளும் இந்த பல்வகைமையை இசைவுபடுத்துவதற்கு தேவையான அரசியல் கட்டமைப்புகளும் குறித்து ஒரு அறிவார்ந்த முறையில் கருத்தரங்கில் ஆராயப்பட்டது. இந்த சவாலுக்கு புதிய அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டியது அவசியமாகும். தேசிய நல்லிணக்கத்துக்கும் இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வுக்கும் அவசியமான அடிப்படை கட்டுமானங்கள் கைக்கெட்டிய தூரத்தில் இருப்பதாக தோன்றுகிறது.

மாகாணங்களின் ஆளுநர்களையும் வேறு அதிகாரிகளையும் அழைத்து அவர்களின் ஆட்சிமுறை வகிபாகங்களை மேம்படுத்துவது குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க, நீண்டகாலமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கும் மாகாணசபை தேர்தல்களை அடுத்த வருடம் நடத்தப் போவதாகவும் அறிவித்தார். ஜனாதிபதி எடுத்திருக்கும் இந்த நிலைப்பாடு குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்களினால் வரவேற்கப்படும் சாத்தியம் சாத்தியம் இருக்கிறது.

மாகாணசபை முறை என்பது ஆட்சிமுறையை பன்முகப்படுத்துவதை பற்றியது மாத்திரமல்ல, மாகாண மட்டத்தில் மக்களினால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் தீர்மானங்களை எடுப்பதற்கு வழிசெய்யும் ஒரு பரவலாக்கப்பட்ட ஆட்சிமுறையுமாகும். இந்த தர்க்க நியாயத்தின் பிரகாரம் நோக்கும்போது மத்திய அரசாங்கத்திடம் இருந்து வருகின்ற அறிவுறுத்தர்கள் மாகாணசபை முறையின் நோக்கங்களை பூர்த்திசெய்வது சாத்தியமில்லை. ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளை வைத்து நிருவகிப்பது அல்ல மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற உள்ளூார் பிரதிநிதிகளுக்கு அதிகாரமளிப்பதே அவசியமாகும்.

**அவசரத்தேவை**

மாகாணசபை முறை பெரும் செலவுபிடிக்கிற ஒன்றாக இருக்கிறது என்பது அதற்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற பொதுவான விமர்சனங்களில் ஒன்றாகும். ஆட்சிமுறையின் மேலதிகமான ஒரு அடுக்கான மாகாண சபைகள் ஏற்கெனவே நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கும் தேசிய பட்ஜெட்டுக்கு ஒரு நிதிச்சுமையாக இருக்கிறது என்று வாதிடப்படுகிறது.

ஆனால், செலவைக் கட்டுப்படுத்திச் செயலபடவேண்டும் என்பது ஒரு நியாயபூர்வமான அக்கறையாக இருக்கின்ற அதேவேளை, நிதி சம்பந்தப்பட்ட காரணிகளில் மாத்திரம் கவனத்தைக் குவிப்பது அரசியல் அதிகாரமளித்தல் மற்றும் பொருளாதார ஒப்புரவு தொடர்பிலான ஆழமான மதிப்பை மலினப்படுத்தும் ஆபத்தை கொண்டிருக்கிறது.

அரசியல் மற்றும் பொருளாதார மத்தியமயப்படுத்தலை உன்னிப்பாக நோக்கும்போது அது பொருளாதார அசமத்துவத்தை நீடித்திருக்கச் செய்யும் கணிசமான ஏற்றத்தாழ்வுக்கு வழி வகுத்திருப்பதையும் மிகவும் முக்கியமாக மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போருக்கு இட்டுச் சென்ற அரசியல் புறக்கணிப்பு உணர்வுக்கும் காரணமாக விளங்கியதை புரிந்துகொள்ள முடியும்.

சர்வதேச பின்புலத்தில் நோக்கும்போது பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சிமுறையின் மூலமான அதிகாரப் பகிர்வு பரப்பளவில் பெரிய இந்தியா மற்றும் இலங்கையைப் போன்ற சிறிய பரப்பளவைக் கொண்ட சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் உட்பட பல்கலாசார - பல்லின் சமூகங்களில் நியமமாகிவிட்டதை காணமுடியும்.

சுவிட்சர்லாந்து கணிசமான சுயாட்சியுடன் கூடிய 26 கன்ரோன்களை கொண்டிருக்கிறது. இந்த கட்டமைப்பு சுகாதாரம், கல்வி மற்றும் பொலிஸ் போன்ற துறைகளில் சுயாட்சியுடன் கன்ரோன்களுக்கு அதிகாரளிக்கிறது. சமஷ்டி அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை சுவிஸ் அரசியலமைப்பு விபரிக்கின்ற அதேவேளை, ஏனைய சகல அதிகாரங்களும் கன்ரோன்களுடன் உள்ளன. தீர்மானங்களை மேற்கொள்வதில் கன்ரோன் நிருவாகங்களுக்கு (உள்ளூராட்சி அரசாங்கங்கள்) கணிசமான சுதந்திரம் இருக்கிறது.

இலங்கையில் ஒருபுறத்தில், மத்திய அரசாங்கம் பெரும்பாலான செயற்கடமைகள் தொடர்பில் கணிசமான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. பாதுகாப்பு, நிதித்துறை, தேசியக் கொள்கை போன்ற விவகாரங்கள் மிகவும் இறுக்கமாக மத்தியமயப்படுத்தப்பட்டிருக்கின்றன.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஏழு வேட்பாளரின் விருப்பு வாக்குகளையும் ஒருவருக்கே இடுமாறு கட்டளையிடும் தமிழரசு அணியின் ஜனநாயக தேர்தல்!

**பனங்காட்டான்**




இலங்கைத் தமிழர்களின் கலாசார தலைநகரம் என்றும் அரசியல் தலைப்பட்டணம் என்றும் புகழ் பெற்றது யாழ்ப்பாணம். தமிழரசின் நிறுவகத் தலைவர் தந்தை செல்வாவின் உருவச்சிலை, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் நினைவுச் சின்னம், சிங்கள தேசத்தின் தீக்கிரையாக்கப்பட்ட பின்னரும் பீனிக்ஸ் பறவையாக எழுந்து நிற்கும் யாழ்ப்பாண பொதுநூலகம் போன்ற பல நினைவெழுச்சிகளால் நின்று நிலைத்து நிமிர்ந்து நிற்பது யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களை கொண்டிருப்பது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம். 1977ம் ஆண்டுத் தேர்தல்வரை யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, உடுவில், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, கிளிநொச்சி என பதினொரு தொகுதிகளில் தங்கள் பிரதிநிதிகளாக பதினொரு பேரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய தேர்தல் மாவட்டம் இது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போன்று இன்று ஆறு பேரை மட்டும் தெரிவு செய்யும் நிலைக்கு இது இறங்கியுள்ளது. புலம்பெயர்ந்தவர்களில் அதிகமானவர்கள் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைவிட விடுதலைப் போராட்டத்தை ஒட்டி சிங்கள பேரினவாதத்தால் லட்சக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டதும் இதற்குக் காரணம்.

1977ல் இருந்த எண்ணிக்கையில் ஐம்பது வீதமளவுக்கு எம்.பிக்களின் எண்ணிக்கை இங்கு குறைந்திருப்பினும், இந்த மாதம் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த மாவட்டம் அனைவராலும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகிறது. இதற்கான அடிப்படைக் காரணம் இங்கு போட்டியிடும் அனைத்துக் கட்சிகளும் மற்றும் குழுக்களும் ஒரு ஆசனத்தையாவது தாங்கள் கைப்பற்றிவிட வேண்டுமென துடியாய்த் துடிப்பதுவே.

23 அரசியல் கட்சிகள், 21 சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடினும், தாய்க்கட்சிகள் என்று கனதி கொண்ட தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும் கூடுதலான ஆசனங்களை யார் பெறுவது என்ற ஒரு வகை பனிப்போரில் ஈடுபட்டுள்ளன. தலைவரில்லாத கட்சி என்ற பெருமை பெற்றுள்ள தமிழரசுக் கட்சி இம்முறை அனைத்துத் தரப்பினரதும் எதிர்ப்பைச் சந்தித்து வருவது பளிச்சென தெரிகிறது. முக்கியமாக இந்த அணிக்குத் தலைமை தாங்குபவரின் சுயநலப் போக்கு கட்சியை சீரழித்து நிற்கிறது.

தமிழ்த் தேசிய சார்பு வாக்குகள் இந்தத் தேர்தலில் பலவாறாக பிளவுபட்டு காணப்படுகிறது. ஒவ்வொரு தரப்பும் தாங்களே அதிகூடிய ஆசனங்களைப் பெறுவோமென்று அறிவித்து வருகின்றன. தேர்தலில் போட்டியிடுபவர்கள் எவருமே தாங்கள் தோல்வியடைவோம் என்று ஒருபோதும் சொல்வதில்லை. ஆதலால் ஆறு ஆசனங்களையும் தாங்களே பெறுவோமென்று சொல்பவர்களை எவரும் பெரிதாக நம்பப் போவதில்லை.

யாழ்ப்பாணத்தின் மூத்த பொருளாதார நிபுணர் ஒருவருடன அண்மையில் உரையாடியபோது ஒரு கணிப்பை வரைபடமாக முன்வைத்தார். தர்மலிங்கம் சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கடந்த கால தேர்தல்களில் பிரபல்யமாக வெற்றி பெற்றவர்கள். நாடளாவிய ரீதியில் மேலோங்கி நிற்கும் அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி இப்போது யாழ்ப்பாணத்தில் வேகமாக வீச்சுப் பெறுகிறது (அண்மையில் ஒரு செவ்வியில் சுமந்திரனே இவ்வாறு குறிப்பிட்டதாக ஊடக செய்திகளில் காண முடிகிறது). வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கூட்டணி இளையோர் பட்டாளத்தை களமிறக்கியுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனித்து நிற்கும் வெற்றி நட்சத்திரம். ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கணிசமான வாக்குகளைப் பெற்ற சஜித் பிரேமதாசவும் ஒரு ஆசனத்தை எதிர்பார்க்கிறார். (இதற்குக் காரணம் சுமந்திரன்தான்). ரணிலின் ஐக்கிய தேசிய கட்சிக்கு எப்போதுமே தமிழர் மத்தியில் உயர்மட்ட செல்வாக்கு உண்டு. (இதனை உருவாக்கிக் கொடுத்தவர்களும் தமிழரசுக் கட்சியினரே).

இப்படிப் பார்க்கின் சுமார் ஐந்து ஆசனங்களை தமிழரசுக் கட்சியில் போட்டியிடாதவர்கள் கைப்பற்றும் சாத்தியமுண்டு. பாவம்பார்த்து மக்கள் ஆதரவு கிடைக்குமானால் தமிழரசுக் க்ட்சிக்கு ஓர் ஆசனம் கிடைக்கலாம். இந்த அணிக்கு சுமந்திரன் தலைமை தாங்குவதால் அதுவும்கூட சந்தேகம்தான் என்று விபரமாக விளக்கமளித்தார் அந்தப் பொருளாதார நிபுணர்.

**யாழ் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையாவது பெற வேண்டுமென்ற தமிழர் தரப்புகளின் போட்டி. எதிர்க்கட்சித் தலைமையை கைப்பற்றுவதற்கான போட்டி தெற்கில். இது, தோழர் அநுர குமார அணிக்கு அறுதிப் பெரும்பான்மையை இலகுவாகப் பெற்றுக்கொடுக்கும் என்று கணிக்கப்படுகிறது.**

தமிழரசுக் கட்சி வேட்பாளர் தொடர்பாக முக்கியமான தகவல் ஒன்று கடந்த சில தினங்களாக கசிய ஆரம்பித்துள்ளது. இந்த அணியின் முதன்மை வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பவர் கிளிநொச்சி சிவஞானம் சிறீதரன். இவர் தீவுப்பகுதியை பிறந்தகமாகவும், கிளிநொச்சியை புகுந்தகமாகவும் கொண்டவர். விடுதலைப் புலிகளின் முக்கிய போராளித் தலைவர்கள் இருவரின் சகோதரியை திருமணம் புரிந்தவர். போர்க்காலத்தில் வன்னிப் பகுதியில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியவர். இவரை முதன்மை வேட்பாளராக்கினால் கட்சியின் வீடு சின்னத்துக்கு வாக்குகளை இவரது பெயர் பெற்றுக் கொடுக்கும். அதனால் கட்சிக்கு போனஸ் ஆசனம் இலகுவாகக் கிடைக்கும் எனும் அரசியல் ஆதாயம் தரும் கணிப்பினால் முதன்மை வேட்பாளராக்கப்பட்டார்.

தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் மிகுதி எட்டுப் பேரும் சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர்கள். அதாவது, சுமந்திரனால் அபேட்சகர்களாக உள்வாங்கப்பட்டவர்கள். இவர்களுக்கு தனித்தனியாக அண்மையில் ரகசிய கட்டளை; ஆலோசனை வழங்கப்பட்டதாம். இதன் போது அவர்களுக்கு தெரிவிக்கப்பட்ட விடயம் பின்வருமாறு: 'தேர்தல் பரப்புரையின்போது தமிழரசின் சின்னமான வீடுக்கு நேரே புள்ளடி இடுமாறு எடுத்துக் கூற வேண்டும். அடுத்து, விருப்பு வாக்கு என்ற இடத்தில் சுமந்திரனுக்கு மட்டும் வாக்களிக்க வேண்டும். இதன் வழியாகவே சுமந்திரன் அதிகூடிய விருப்பு வாக்குகளால் தெரிவாக முடியும்' என்று இவர்கள் அறிவுறுத்தப்பட்டனராம்.

இந்த ஆலோசனையின் போது எழுவரில் ஒருவர் மட்டும் சற்றுக் குழப்பம் அடைந்து காணப்பட்டுள்ளார். தாம் எதற்காக இன்னொருவருக்கு விருப்பு வாக்கு போடவேண்டுமென்று கேட்க முடியும் என்பது இவரது நியாயமான கேள்வி. அதற்கு உடனடியாகவே பதில் வழங்கப்பட்டது.

'இந்தத் தேர்தலில் எமது கட்சிக்கு ஓர் ஆசனமாவது கிடைக்க வேண்டும். உங்களில் ஒருவராலும் அந்த வெற்றியை பெறமுடியாது. நீங்கள் அனைவரும் இணைந்து ஒருவருக்கு (சுமந்திரனுக்கு) விருப்பு வாக்குகளை ஒட்டுமொத்தமாக வழங்கினால் மட்டும் அவரையாவது நாடாளுமன்றம் அனுப்பலாம்' என்பது பதிலாக இருந்தது.

அத்துடன் நிறுத்தப்படவில்லை. வரப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாணசபை தேர்தல்களில் இதற்கான வெகுமதி (றிவார்ட்) உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் இச்சபைகளின் உறுப்பினர்களாக அல்லது தலைவர்களாக நியமிக்கப்படுவீர்கள்" என்று நம்பிக்கை உறுதி வழங்கப்பட்டது. அத்துடன் நிறுத்தாது, தற்செயலாக சிவஞானம் சிறீதரன் வெற்றி பெறுவாரானால் அவர் எம்.பி பதவியை தொடர முடியாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் ஷஓட்டை; உள்ளது என்றும் இவர்களுக்கு சொல்லப்பட்டுள்ளதாம்.

திருமலை, மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களிலும் சுமந்திரனின் தமிழரசு அணி பல நெருக்குவாரங்களை சந்தித்து வருகிறது. மகிந்த ராஜபக்சவின் அணியில் முன்னர் அங்கம் வகித்து, கடந்த தேர்தலில் தமிழரசு அணியில் போட்டியிட்ட சுமந்திரனின் கையாளான மட்டக்களப்பு பிரமுகர் இப்போது பாவமன்னிப்பு கேட்ட விடயத்தை ஊர்க்குருவியில் படித்தபோது, சி.வீ. கே.சிவஞானம் அவர்கள் அண்மையில் கூறியதுபோல பிசாசுடன் வைக்கின்ற சகவாசம் பலரையும் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி வருவது தெரிகிறது.

இவ்வாறான அரசியல் காலநிலையை அநுர தரப்பு தமக்கான ஆரோக்கிய பலமாக ஆக்கி வருகிறது. வடக்கிலும் கிழக்கிலும் சுமார் ஒரு டசின் ஆசனங்களையாவது பெற முடியுமென்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர். உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ச போன்றவர்ககள் தாமும் அரசியலில் இருப்பதாகக் காட்டிக் கொள்ள அவ்வப்போது புதிய அரசுக்கு சவால் விடுகின்றனர். ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவரான விமல் வீரவன்ச சற்று ஓரங்கட்டி நிற்பதுபோல தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தாலும் தன்னை சிங்கனாகவே காட்டிக் கொள்ள விரும்பும் ரணில், அநுர தரப்பு மீது குறைசொல்லி வருவதை தினமும் காணமுடிகிறது. சில நாட்களுக்கு முன்னர் தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் ரணிலுக்குமிடையிலான சொற்போர் ஒன்று மிகப் பிரசித்தி பெற்றுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பாக அமைச்சரவையின் தீர்மானம் எடுப்பதற்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியமென ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டிருந்தார். இலங்கையின் அரசியல் அமைப்பை ஹரிணி எங்கே கற்றுக் கொண்டார் என்பது குறித்து ஆச்சரியம் வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக அவருக்கு அரசியலமைப்பை கற்றுக் கொடுக்க தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இதற்கு சுடச்சுட பதிலளித்த பிரதமர் ஹரிணி, தேர்தலில் தோல்வியடைவது எவ்வாறு என்று ஆலோசனை கூறவே ரணில் தகுதியானவர் என்று விளாசியதோடு மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்னரும் அரசியலுக்குள் நுழைய ரணில் துடிக்கிறார் என்றும் பதிலடி கொடுத்துள்ளார்.

இவைகளைப் பார்க்கையில் ஒரு விடயம் நன்கு புலப்படுகிறது. யாழ் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையாவது பெற வேண்டுமென தமிழ் கட்சிகளுக்கிடையே கழுத்தறுப்பு போட்டி இடம்பெறுகிறது. தெற்கில் அநுர தரப்பு அறுதிப் பெரும்பான்மையை பெறக்கூடாது என்பதிலும் அடுத்த எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதிலும் போட்டி இடம்பெறுகிறது. இதுவே அநுர தரப்புக்கு பலம் சேர்ப்பதாக மாறிவருகிறது என்பதை இவர்கள் அறியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- கண்ணால் காண்பதும் பொய்

இரா. முருகவேள்

இலங்கை சிவந்தது. மார்க்சீயவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டனர். இலங்கை ஒரு மார்க்சீய சார்பு கொண்ட ஜனாதிபதியைத் தேர்தெடுத்துள்ளது. புதிய ஜனாதிபதி சே குவேராவால் உத்வேகமூட்டப்பட்டவர் என்றெல்லாம் இந்திய, பன்னாட்டு ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டு செய்தி வெளியிட்டன. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட இடதுசாரி அமைப்பு தேர்தலில் நின்று வெற்றி கண்டது சிறப்பானது என்று இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் ) தோழர்கள் கொண்டாடினர்.

இவையெல்லாம் முழுவதும் பொய் என்று சொல்லி விட முடியாது. ஜேவிபி ஒரு சோஷலிச இலங்கையை உருவாக்கத்தான் தோற்றுவிக்கப்பட்டது. இலங்கை இடதுசாரிகள் போதுமான அளவுக்கு புரட்சிகரமாக இல்லை. மக்களைத் திரட்டவும் அரசியல் படுத்தவும் அவர்கள் முயலவில்லை என்று கருதிய ரோஹன விஜய வீரா என்ற இளைஞரும் அவரது தோழர்களும் 1965 வாக்கில் மக்கள் விடுதலை முன்னணி என்னும் ஜனதா விமுக்தி பெரமுனாவை உருவாக்கினர். 1971 ஆம் ஆண்டு இந்த புதிய கட்சி தன்னை ஒரு அரசியல் கட்சியாக அறிவித்துக் கொண்டது. இதன் வளர்ச்சி இலங்கை அரசுக்கும் பழைய பாணி இடதுசாரி கட்சிகளுக்கும் அதிர்ச்சியளித்தது. இந்தப் புதிய அமைப்பின் மீது அடக்குமுறைகள் ஏவி விடப்பட்டன.

1971 ஆம் ஆண்டு ஏப்ரலில் கடும் அடக்குமுறைகளை ஆயுத எழுச்சி கொண்டு எதிர்கொள்ள ஜேவிபி முடிவு செய்தது. போதுமான ஆயுதங்களும் பயிற்சியும் இல்லாமலிருந்தும் ஜேவிபியினர் தென்னிலங்கையின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றினர். இரண்டு வார போராட்டத்துக்குப் பிறகு இந்தியாவின் ராணுவ உதவியுடன் இலங்கை அரசு கிளர்சியை ஒடுக்கியது. 20,000 ஜேவிபியினர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பின்பு ஜேவிபிக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அந்தக் கட்சி தேர்தலில் நின்றாலும் பெரிய வெற்றியோ வாக்குகளோ பெறவில்லை. இருந்த போதிலும் ஜேவிபி மக்களிடையே நல்ல செல்வாக்கு பெற்றிருந்தது என்பதை அறிய முடிகிறது. சாஸ்திரி சிரிமாவோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டின் கூடலூர், வால்பாறை போன்ற பகுதிகளுக்கு வந்த இலங்கை மலையகத் தமிழர்களில் சிலர் ஜேவிபி ஆதரவாளர்களாக இருந்ததைப் பார்த்து தமிழ் நாட்டு தொழிற்சங்கவாதிகள் வியப்படைந்தனர்.

1983 ஆண்டில் தமிழர்களுக்கு எதிராக நடந்த படுகொலைகளுக்கும் கலவரங்களுக்கும் பிறகு யாழ்ப்பாணத்தில் நிறுத்தப் பட்ட சிங்கள ராணுவ வீரர்களில் இளநிலை அதிகாரிகள் பலர் ஜேவிபி ஆதரவாளர்களாக இருந்தனர். செ. கணேசலிங்கனின் நாவல்களிலும் இதைக் காண முடியும்.

1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதையடுத்து, இந்திய விரிவாதிக்கத்தை எதிர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த ஜேவிபி பெரும் வளர்ச்சி கண்டது. வட இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய ராணுவத்துக்கும் கடும் போர் நடந்து வந்த நேரத்தில் தென்னிலங்கையில் ஜேவிபிக்கும் இலங்கை ராணுவத்துக்கும் இடையே உக்கிரமான மோதல்கள் நடந்து வந்தன. ஜேவிபி பெரும்பாலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் போன்றவர்களை தனிநபர் அழித்தொழிப்பு செய்தது. போலீஸ், ராணுவத்தினர் மீது தாக்குதகள் நடத்தியது. பதிலுக்கு ராணுவம் பல்லாயிரம் ஜேவிபியினரை எரித்தும் சுட்டும் கொன்றது. சுமார் 60000 பேர் கொல்லப்பட்டதாக கணக்குகள் கூறுகின்றன. இந்த எழுச்சியில் மலையகத்தில் தலைமறைவாகவிருந்த ரோஹன விஜயவீர உள்ளிட்ட ஜேவிபியின் எல்லா தலைவர்களும் பிடிக்கப்பட்டு போலி மோதல்களில் கொல்லப்பட்டனர். தப்பிய சோமவன்சா அமரசிங்கே என்ற தலைவர் இலங்கை அரசின் வேட்டையால் பல நாடுகளில் சுற்றியலைந்து இறுதியில் பிரிட்டனில் தங்கி ஜனதா விமுக்தி பெரமுனாவை மீளக் கட்டியமைத்தார். இவர் 1990 லிருந்து 2014 வரை தலைவராக இருந்தார். 1994 ஆம் ஆண்டு இலங்கை திரும்பினார்.

இந்தக் காலகட்டத்தில் ஜேவிபி ஆயுதப் போராட்டத்தை முற்றிலும் கைவிட்டது. பல்வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்து இலங்கை தேர்தல்களில் பங்கெடுத்துக் கொண்டது. சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகவிருந்த சுதந்திரக் கட்சி அரசில் ஜேவிபி பங்கு கொண்டது. அப்போது இப்போதைய ஜனாதிபதியான அனுரா குமார திசனாயக்க விவசாய அமைச்சராக இருந்தார். அப்போதுதான் விடுதலைப்புலிகள் ஓயாத அலைகள் என்ற பெயுரில் அடுத்தடுத்து நடத்திய பெரும் தாக்குதல்களில் வட இலங்கையில் முல்லைத்தீவு, ஆனையிறவு, பரந்தன், போன்ற மிகப் பெரிய ராணுவ முகாம்கள் துவம்சம் செய்யப்பட்டன. திருகோணமலை தவிர தமிழ் ஈழம் என்றழைக்கப்பட்ட பகுதியில் 90 சதவீதம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பட்டின் கீழ் வந்தது.

ராணுவம் பலத்த பின்னடைவைச் சந்தித்ததை அடுத்து சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கினார். சுனாமி வந்த போது நிதியை புலிகளுடன் பகிர்ந்து கொள்வது பற்றிப் பேசப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனுரா குமார திசநாயக்க தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

2014 ஆம் ஆண்டு ஜேவிபியின் தலைவரான சோமவன்சா அமரசிங்கே கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் பதவிவிலகி தனிக்கட்சி உருவாக்கினார். அதற்குப் பின்பு அனுரா குமார திசநாயக்க தலைவரானார். அவர் தலைவரானதுமே முன்பு நடந்த எழுச்சிகளுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இதன் மூலம் இன்னொருமுறை இப்படியொரு எழுச்சி நடக்காது என்று இலங்கை ஆளும் வர்க்கங்களுக்கு உறுதியளித்தார். ஜேவிபி தன்னை இலங்கையை ஆண்டு வரும் இரண்டு மூன்று குடும்பங்களுக்கு வெளியாள் என்று கூறிக் கொண்டாலும் மேலும் மேலும் இலங்கையின் ஆளும் நிறுவனங்களுக்குள் ஐக்கியப்பட்டது.



அனுரா குமாரா திசநாயக்க மேலும் மேலும் ரோஹன விஜயவீராவின் புரட்சிகர மார்க்சீய அரசியலில் இருந்து விலகிச் சென்றார். அந்த ஆண்டுகள் சிங்கள தேசியவாதமும், புத்தமத அரசியலும் உச்சத்திலிருந்த ஆண்டுகள். ஜேவிபியின் இடத்தை புத்த மத அரசியல் பிடித்துக் கொண்டது. ஜேவிபி பல இடதுசாரி கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், என் ஜி ஒக்களைக் கொண்டு தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தினார். 2019 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் நின்ற திசநாயக்க பெற்றது வெறும் 3 சதவீத வாக்குகள் தான்.

2022 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் திவாலானது. கொரொனா முழு அடைப்புகளை ஒட்டி இலங்கையின் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது. ஏற்கெனவே தடுமாறிக் கொண்டிருந்த பொருளாதாரம் மேலும் நொறுங்கியது. அதனால் உலக வங்கி போன்றவர்களிடமிருந்து வாங்கிய கடன்களைத் திருப்பித் தர முடியவில்லை. எனவே உணவு, பெட்ரோல், மருந்துகள் போன்றவற்றை இறக்குமதி செய்ய முடியவில்லை. கடும் உணவுத் தட்டுப்பாடு, அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டதையடுத்து அரகலயா என்ற பேரெழுச்சி ஏற்பட்டது. மிகவும் வலிமை வாய்ந்த ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் வீழ்ச்சியடைந்தது. அதற்கு முன்பிருந்தே சுதந்திரக் கட்சியும், ஐய்கிய தேசிய கட்சியும் அதிலிருந்து உடைந்த பிரிவுகளும் மேலும் மேலும் உடைந்து இலங்கை அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தின.

இலங்கையை காலங்காலமாக ஆண்டு வந்த ஜெயவர்த்தனே, பண்டாரநாயக்க குடும்பங்களின் மேலுள்ள வெறுப்பு, திசநாயக்காவின் ஏழைகளுக்கு ஆதரவான பேச்சுக்கள், 2022 இல் ஏற்பட்ட வீழ்ச்சி எல்லாம் சேர்ந்து ஒரு மார்க்சீயவாதியை ஜனாதிபதியாக உட்கார வைத்துள்ளன. ஏழை மக்களின் விருப்பமே இலங்கையில் வெற்றி பெற்றுள்ளது. இனி எல்லாம் நலமே நடக்கும் என்று முடிப்பது கட்டுரைக்கு நல்ல முடிவாக இருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்படி முடிக்க முடியாத வண்ணம் சில சிக்கல்கள் உள்ளன.

2022 ஆம் ஆண்டு கோத்தபய ராஜபக்ஷ அரசு திவாலாகி, கோத்தபய நாட்டை விட்டு ஓடியதும் இலங்கை முன்னால் இரண்டு வழிகள் இருந்தன.

நாட்டை சூறையாடி வந்த ஆளும் வர்க்கங்களின் சொத்துக்களை அரசுடமை ஆக்கி, அன்னிய நிறுவனங்களை வெளியேற்றி, அநீதியான வெளிநாட்டு ஒப்பந்தங்களை ரத்து செய்து பொருளாதாரத்தை மீட்பது.

ஐ எம் எஃப் இடம் பெரும் கடன் வாங்கி நெருக்கடியில் இருந்து மீள்வது. அதற்கு பதிலாக நாட்டின் செல்வவளங்களை தனியார்மயமாக்குவது, மக்கள் சேவைக்கு ஒதுக்கப்படும் பணத்தை ரத்து செய்வது ஆகியவையே இந்த இரண்டு வழிகள்.

அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ரணில் விக்ரமசிங்கவை அதிபர் ஆக்கியது. அமெரிக்காவின் விருப்பமான தேர்வு ரணில் என்று பேசப்பட்டது. ரணில் ஆட்சியில் ஐ எம் எஃப் இடம் கடன் வாங்கி இலங்கையின் பொருளாதாரம் மீட்கப்பட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. மேலும் மேலும் நாசமாகி வந்தது. 2022 ஐ போன்ற இன்னொரு எழுச்சி ஏற்படும் என்ற சூழ்நிலை உருவாகி வருகிறது என்பதை இலங்கை ஆளும் வர்க்கங்களும், அமெரிக்காவும் அறிந்திருந்தன.

மார்க்சிய கட்சி என்று கருதப்பட்ட ஜேவிபியின் செல்வாக்கு அதிகரித்து வந்தது. ஆரம்பத்தில் அமெரிக்கா, ரணில் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து வருகிறார் என்று தனது கைத்தடிகள் மூலம் பிரச்சாரம் செய்தது. அவர்கள் மேலும் மேலும் மார்க்சீயம், ஏழைகளின் நலன் என்று பேசிய ஜேவிபி பக்கம் சாய்ந்து வந்தனர். எனவே அமெரிக்கா ஜேவிபியையே அணுகி காரியத்தை சாதித்து விட்டது.

ஜேவிபி வென்று அனுரா குமார திசநாயக்க அதிபர் ஆனார். ஆனால் ஒரு தூய மார்க்சீயவாதியாக ஐ எம் எஃப் ஐ நாட்டை விட்டு துரத்தாமல் அதனோடு பேச்சு வார்த்தை நடத்தி நிபந்தனைகளின் கடுமையை குறைக்கும் படி கேட்டுக் கொள்வேன் என்று கூறினார். அன்னிய முதலீட்டாளர்கள் அச்சப்பட வேண்டாம் என்று உறுதியளித்தார். இந்தியா மற்றும் சீனாவின் உறவு மதிக்கப்படும் என்றார்.

சோஷலிச லட்சியங்கள் பற்றிப் பேசாமல் எல்லா முதலாளித்துவ அரசியல்வாதிகளையும் போல ஊழல் ஒழிப்பு, தூய ஆட்சி பற்றியே பேசினார்.

புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி என்று சொல்லப்பட்ட ஜனதா விமுக்தி பெரமுனாவுக்கு என்ன நேர்ந்தது, எப்படி நேர்ந்தது என்பது ஒரு சுவாரஸ்யமான கதை.

திசாநாயக்கவின் வெற்றிக்கு இரண்டு காரணங்கள் உள்ளன என்று சமன் குணதாச என்பவர் எழுதிய (**JVP/NPP leader elected as new president of sri lanka- Saman gunadasa Jayasekera – World socialist web site**) கட்டுரை கூறுகிறது. பொருளாதார நெருக்கடி அது ஏற்படுத்திய சமூக பிரச்னைகள் ஆகியவை ஒரு காரணம்.

இலங்கை ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதி ஜேவிபியை ஆதரித்தது என்பது இன்னொரு காரணம். 2022 இல் நடந்த எழுச்சி திரும்பவும் நடக்காமல் தடுக்கவே ஆளும் வர்கத்தின் ஒரு பிரிவு ஜே வி பியை ஆதரித்தது என்கிறது மேற்சொன்ன கட்டுரை. ஜேவிபி ஆட்சிக்கு வருவது என்பது சோஷலிசம் நிலைநாட்டப்பட்டு விட்டது. எழுச்சி முடிவடைந்து விட்டது என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்தும் என்பதே இலங்கையின் ஆளும் வர்க்கங்கள், மற்றும் அமெரிக்காவின் கருத்தாகும்.

திசநாயக்க பொருளாதாரத்தை மீளக் கட்டியமைத்து, ஏழை மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தி, ஊழலையும், பணம் படைத்த வர்க்கங்களின் சலுக்கைகளையும் ஒழிப்பதாக சொல்லி ஓட்டுக் கேட்டார். அதே நேரம் அவர் ஐ எம் எஃப் சொல்லும் பொருளாதார சீர் திருத்தங்களைச் செய்யப் போவதாகவும் உறுதியுமளித்தார். அதற்கு பதிலாக அமெரிக்கா 3 பில்லியன் டாலர் நிதியுதவி அளிக்கும். இதற்காக அரசு நிறுவனங்களை விற்பனை செய்தல், பொதுத்துறை வேலைகளை இல்லாமல் செய்தல், சுகாதாரம், கல்வி போன்றவற்றில் தனியார் துறையை ஊக்குவித்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும். இதுபற்றி திசநாயக்க எதுவும் பேசவில்லை. கடன் வேண்டாம் என்று சொல்லவும் இல்லை. நிபந்தனைகளுக்கு உடன்பட முடியாது என்றும் சொல்லவில்லை.

திசநாயக்க தான் ஐ எம் எஃப் உடன் கடனுக்கான நிபந்தனைகளின் கடுமையைக் குறைப்பது குறித்து பேச்சு வார்த்தை நடத்தப்போவதாக கூறியுள்ளார். ஆனால் ஐ எம் எஃப் அதற்கு இடமே இல்லை என்று கூறிவிட்டது.

செப்டம்பர் 4 ஆம் தேதி தொழிலதிபர்கள், பெருவணிகர்களுக்கான மாநாட்டில் பேசிய திசநாயக்க அவர்களுக்கு முழு பாதுகாப்பு அளிப்பதாகவும், அன்னிய முதலீட்டாளர்களை ஆதரிப்பதகவும் உறுதியளித்தார். **The wizaedry of Anura Kumara Dissanayake, sri lanks's new president – R.K. Radhakrishnan, Frontline, the hindu.com**

அனுரா குமார திசனாயகே குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றது ஒரு மாயாஜாலம் என்கிறது மேற்கண்ட கட்டுரை. 2019 ஆம் ஆண்டிலிருந்து ஏராளமான இலங்கை மக்கள் வறுமையில் தள்ளப்பட்டனர். திசாநாயக்க தன்னை இவர்களது குரலாக முன்னிலைப் படுத்திக் கொண்டார். 2022 முதல் 2024 வரை திசனாயக்க தான் இலங்கை ஆளும் வட்டங்களை சேர்ந்த ஆள் அல்ல. சாதாரணன் வெளியாள் என்று மக்களை நம்ப வைத்ததில் வெற்றி பெற்றார்.

பலவிதங்களில் இவரது அணுகுமுறை மோடியைப் போலிருக்கிறது என்கிறது பிரண்ட்லைன் கட்டுரை. திசனாயக்கவின் தாயார் வாக்களிக்க இலங்கையில் டக் டக் என்று அழைக்கப்படும் ஆட்டோ ரிக்ஷாவில் வந்தார். ஆனால் திசநாயக்க ஆடம்பரமான சொகுசு காரில் வந்தார். விக்ரமசிங்கே இது ஒரு நாடகம் என்று எக்ஸ் தளத்தில் கிண்டல் செய்தார்.

உண்மையில் திசநாயக்க ஆளும் வர்க்கங்களுக்கு வெளியாள் அல்ல. 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 2004 லிருந்து 2005 வரை விவசாய அமைச்சராக இருந்தார். அது சந்திரிகா குமாரதுங்காவின் அப்பட்டமான முதலாளித்துவ அரசு. அதில் விவசாய அமைச்சராக இருந்த போதும் திசாநாயக்க விவசாயிகளின் நலனுக்கான திட்டங்கள் எதையும்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கின் அரசியல் மாற்றம் வடக்குக் கிழக்கில் பிரதிபலிக்குமா?



கந்தையா அருந்தவபாலன்

ஒரு நாட்டின் அரசியல் மாற்றம் என்பதை பல்வேறு கோணங்களில் நாம் பார்க்க முடியும். ஆளும் கட்சியில் ஏற்படும் மாற்றம், ஆளும் அரசியல் தலைவர்களில் ஏற்படும் மாற்றம், கட்சி அல்லது தலைவர்களின் கொள்கைகளில் ஏற்படும் மாற்றம், அரசியல் அமைப்பிலும், சட்டவாக்கம், நீதி, நிர்வாகக் கட்டமைப்பிலும் பகுதியாகவோ அன்றி முழுமையாகவோ ஏற்படும் மாற்றம் என நாட்டின் அரசியல் செல்நெறியில் தாக்கத்தை ஏற்றடுத்தக்கூடிய எத்தகைய மாற்றமும் அரசியல் மாற்றமாகக் கொள்ளப்படலாம். இம்மாற்றங்கள் இருப்பதை மேலும் செழுமைப்படுத்துவதாக இருப்பது போலவே இழிவு படுத்துவதாகவும் இருந்துவிடுவதுண்டு. இந்தவகையில் தெற்கில் தற்போது ஏற்பட்ட மாற்றம் என்பது கட்சி மற்றும் தலைவர்களின் மாற்றம் மட்டுமே. அதாவது இதுவரை மாறி மாறி ஆட்சி புரிந்த கட்சிகளும் அதன் மேட்டுக்குடி ஆட்சியாளரும் அகற்றப்பட்டு தேசிய மக்கள் சக்தி என்ற ஜே.வி.பியும் நாட்டு மக்களின் பெரும்பான்மையரைப் பிரதிபலிக்கக்கூடிய ஒருவரான அனுரகுமார திசநாயக நிறைவேற்று அதிகாரமுடைய ஆட்சியாளராகவும் மாற்றப்பட்டுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலின் பின் இவரைப்போல பல புதிய முகங்கள் சட்டவாக்கத்தில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புகளுண்டு. இவரது கட்சி பொதுவாக இடதுசாரி சிந்தனை உடையது என்று கூறப்பட்டாலும் அது எந்தளவுக்கு நடைமுறைக்கு வரும் என்பதை எதிர்காலத்தில்தான் அறியக்கூடியதாக இருக்கும். நாட்டின் அரச இயந்திரம் முற்றாக மாற்றப்படுமா, அல்லது மீளமைத்தலா அல்லது பழுதுபார்த்தல் மட்டுந்தானா என்பது இன்னும் உறுதியாகவில்லை. இதில் எதுவாயினும் அது இலகுவாக இருக்கப்போவதில்லை என்பதுடன் அதைச்செய்வதற்கான சவால்களும் அதேவரிசையில் இறங்குமுகமாக இருக்கும். இவ்வாறு சிங்கள மக்கள் மாற்றத்துக்காகப் புதிய தலைவரைத் தெரிவு செய்தது போல அல்லது கணிசமான அளவு புதிய தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு இருப்பது போல இந்நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்களும் மாற்றத்துக்கான சிந்தனை கொண்ட புதிய தலைவர்களைத் தெரிவு செயவதற்கான களநிலைமைகள் வடக்குக் கிழக்கில் உள்ளனவா?

வடக்கு கிழக்கில் மாற்றம் என்பது இத்தேர்தலில் புதிய முகங்கள், அவர்களின் கட்சிகள், அவர்களின் அரசியல் கொள்கை அல்லது சித்தாந்தங்களில் மாற்றம் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளது. முதலில் வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிடும் வேட்பாளர்களை பின்வருமாறு வகைப்படுத்லாம். ஒன்று பதிவு செய்யப்பட்ட கட்சிகளில் போட்டியிடுவோர். மற்றது சுயேட்சைக்குழுக்களாகப் போட்டியிடுவோர். கட்சிகளைப் பொறுத்தமட்டில் வடக்கு கிழக்கை மையமாகக் கொண்ட தமிழ்க் கட்சிகள், இலங்கைத் தேசியக்கட்சிகள் என வகைப்படுத்த முடியும். இவைதவிர வடக்கு கிழக்கை பிரதான ஊட்டப்பகுதியாக்க் கொண்ட ஆனால் அதற்கு வெளியேயும் தனித்து அல்லது கூட்டாகப் போட்டியிடும் முஸ்லிம் கட்சிகளுமுள்ளன. தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தமட்டில் பிரதான கட்சிகளாக இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (தமிழத் தேசிய மக்கள் முன்னணி), ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி),ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி போன்றவை காணப்படுகின்றன. 2020 ஆண்டுத் தேர்தலுடன் ஒப்பிடும்போது இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க இரு மாற்றங்கள் என்னவெனில், ஒன்று கட்சிகளின் கூட்டில் ஏற்பட்ட மாற்றம். மற்றது கட்சிகளின் உறுப்பினர்கள் சுயேட்சைக் குழுக்களாக களமிறங்கியுள்ளமை. சென்ற தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பில் போட்டியிட்ட கட்சிகளான ரெலோ, புளொட் போன்றன அக்கூட்டமைப்பிலிருந்து ஏற்கனவே வெளியேறி ஏனைய சில கட்சிகளுடன் இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற கட்சியை உருவாக்கியிருந்தமையால் தற்போது அக்கட்சியில் போட்டியிடுகின்றன. சென்ற தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்று தனது பெயரை மாற்றிக்கொண்டு போட்டியிட்ட ஈபிஆர்எல்எவ் உம், சிறிகாந்தா தலைமையிலான பதிவற்ற கட்சியான தமிழ்த் தேசியக் கட்சியும், தற்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பிரதான பங்காளிகளாக மாறியுள்ளனர். சுயேட்சையாகப் போட்டியிட்ட ஜனநாயக விடுதலைப் புலிகளும் தற்போது இக்கூட்டணியில் இணைந்து போட்டியிடுகின்றனர். அதேபோல சென்ற தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் போட்டியிட்ட பதிவற்ற கட்சியான தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவி அனந்தி சசிதரன் இம்முறை எதிலும் போட்டியிடவில்லை. இதன்காரணமாக இலங்கைத் தமிழரசுக்கட்சி 1975 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தது போல இத்தேர்தலில் தனித்து களமிறங்கியுள்ளது. சென்ற தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் போட்டியிட்ட மணிவண்ணன் ஏலவே அக்கட்சியிலிருந்து வெளியேறியிருந்த காரணத்தால் தற்போது தமிழ் மக்கள் கூட்ணியின் தலைமை வேடபாளராக களமிறங்கியுள்ளார். இவற்றைவிட கிழக்கில் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் முக்கியமானதாக உள்ளது. இவற்றைவிட வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள குறிப்பிடக் கூடிய வேறிரு மாற்றங்கள், ஒன்று இதுவரை பெரியளவில் அறியப்படாத சிங்களக் கட்சிகள் அதிகளவில் போட்டியிடுதல். மற்றது ஏனைய மாவட்ஙகளுடன் ஒப்பிடும்போது வடக்கு கிழக்கில் அதிகளாவான சுயேட்சைக் குழுக்களின் களமிறக்கம். இதனால் உளளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைவிட நாடாளுமன்றத் தேர்தலை தரமிறக்கிய நிலைக்கு தள்ளியுள்ளதும் ஒரு மாற்றந்தான்.

பிரதான தேசியக்கட்சிகளைப் பொறுத்தும் குறிப்பிடத்தக்க சிலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சென்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் பிரதான தேசியக்கட்சிகளாகக் கருதப்பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றில் ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே இத்தேர்தலில் குறிப்பிட்டுக் கூறும் வகையில் உள்ளது. சென்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்கைப் பெற்று தெரிவான அங்கஜன் இராமநாதன் இத்தேர்தலில் அதிகம் அறியப்படாத கட்சியொன்றில் போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். சென்ற தேர்தலில் தனது சொந்தக்கட்சியான சமத்துவக்கட்சியில் போட்டியிட்ட முருகேசு சந்திரகுமார் இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுகிறார். தேசியக் கட்சிகளைப் பொறுத்தமட்டில் இங்கு பேசுபொருளாக மாறியிருப்பது தேசிய மக்கள் சக்தியாகும். சென்ற தேர்தலில் பத்தோடு பதினொன்றாக இருந்த அக்கட்சி இன்று முக்கியம் பெற்ற ஒன்றாக மாறியுள்ளது. ஒரு புறத்தில் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் வெற்றி, அதன்பின்னர் ஜனாதிபதி அனுரவின் சில ஜனரஞ்சகமான முன்னெடுப்புகள், மறுபுறத்தில் தமிழ்க்கட்சிகள் மீதான தமிழ் மக்களின் அதிருப்தி என்பன வடக்கு கிழக்கில் தேசிய மக்கள் சக்தி மீதான ஈர்ப்பை ஓரளவு உருவாக்கியிருப்பதால் ஏனைய தேசிய கட்சிகளைவிட இங்கு முன்னிலை பெறும் தேசியக் கட்சியாக இத்தேர்தலில் அது மாறியுள்ளது. வடக்கு கிழக்கில் சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சி மொத்தமாகப் பெற்ற வாக்குகள் 9148 (2.14)மட்டுமே. இதில் சிங்கள வாக்காளர்களைக் கணிசமாகக் கொண்ட திருகோணமலை, அம்பாறை (திகாமடுல்ல) என்பனவும் உள்ளடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கட்சி பெற்ற வாக்குகள் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் 853 (0.24), வன்னியில் 662(0.32), மட்டக்களப்பில் 348 (0.12) மட்டுமே.

> ‘வடக்கு கிழக்கில் உள்ள தேர்தல் மாவட்டங்களில் குறைந்தது ஒவ்வொரு உறுப்பினரைப் பெறுவதற்கும் இம்மாவட்டத்தைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் தேசியப் பட்டியல் மூலம் மேலும் சில தமிழ் உறுப்பினர்களை நியமிப்பதன் மூலமும் வடக்கு கிழக்கில் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி மாறுவதற்கு முயலும்’

எவ்வாறு கட்சிகளைப் பொறுத்தோ, அவற்றின் முக்கியத்துவம் குறத்தோ பெரியளவில் மாற்றத்தை காணமுடியாதோ அவ்வாறே அதன் வேட்பாளர்களைப் பொறுத்தும் மாற்றத்தைக் காணமுடியாதுள்ளது. சென்ற தேர்தலில் போட்டியிட்ட மற்றும் தெரிவான சிலர் தாமாகவோ அல்லது கட்சிகள் இடம் கொடுக்காததாலோ இத்தேர்தலில் போட்டியிடவில்லை. மாறாக அவ்வாறு கட்சியில் இடம் கிடைக்காதவர்கள், குறிப்பாகத் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் வேறு கட்சியில் அல்லது சுயேட்சைக் குழுக்களில் இணைந்து கொண்டனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சாள்ஸ் நிர்மலநாதன், ரெலோவில் வினோ நோகராதலிங்கம், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் விக்னேஸ்வரன் போன்றோர் தாமாக விலகிக் கொண்டனர். இதைத்தவிர குறிப்பிடக் கூடிய மாற்றங்களைக் காணமுடியவில்லை. கட்சிகளின் பிரதான வேட்பாளர்களைப் பொறுத்தும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவில் மாற்றம் ஏதுமில்லை. யாழில் புரொட் இல் சித்தார்த்தன், சிவாஜிலிங்கம், சுரேஷ்பிரேமசந்திரன், சுரேன் குருசாமி, தமிழரசுக் கட்சியிலிருந்து சென்ற சசிகலா இரவிராஜ், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் கஜேந்திரகுமார், கஜேந்திரன், சுகாஷ், காண்டீபன், இக்கட்சியில் சென்றமுறை போட்டியிட்டு மூன்றாவது கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற மணிவண்ணன் தமிழ் மக்கள் கூட்டணியில், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சிறிதரன்,சுமந்திரன், ஆர்னோல்ட், ஈபிடிபி டக்ளஸ், இலங்கேஸ்வரன் மற்றும் சந்திரகுமார், அங்கஜன் வன்னியில் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநேசன், சத்தியலிங்கம், இரவிகரன், கிழக்கில் குகதாசன், சாணக்கியன், சிறிநேசன், சந்திரகாந்தன், முன்னைய மேயர் சரவணபவன் போன்ற முக்கிய முகங்கள் எல்லாமே மாற்றமின்றி பழைய முகங்களே. இவற்றுள் குறிப்பிடக் கூடிய ஒரு மாற்றம் என்னவெனில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம். யாழ்ப்பாணத் தொகுதியிலும் வன்னியிலும் இதனைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் அக்கட்சி வேட்பாளர்களுள் மூவரைத்தவிர மிகுதி ஆறுபேரும் இத்தேர்தலுக்குப் புதுமுகங்கள் மட்டுமன்றி இளைஞர்களுங்கூட. ஆனால் இது மக்களுக்கான அரசியல் மாற்றத்துக்காகவன்றி அக்கட்சியில் சுமந்திரன் தனது பிடியை இறுக்கவும், நாடாளுமன்ற பதவியைத் தக்கவைப்பதற்குமான ஒரு தந்திரமாக நோக்கப்படுகிறது. இதையொத்த நிலையை வன்னியிலும் காணமுடியும். வழமையாக சிலரை வெல்லவைப்பதற்காக கையாளப்படும் டம்மி முறைதான் என்றாலும் தமிழரசுக்கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியினாலும் தெரிவு குறையும் என்பதாலும் இம்முறை கனதியான, கனக்க டம்மிகள் அந்தளவே.

இக்கட்சிகளின் கொள்கைகளில் ஏதாவது மாற்றம் உண்டா என்றால் அதுவும் கிடையாது. பல வேட்பாளரது பரப்புரைக் கையேடுகளில் மாற்றத்துக்காக வாக்களிப்பீர் என உள்ளது. ஆனால் என்ன மாற்றம் என்று தெரியவில்லை. யுத்தத்துக்குப் பின்னர் இக்கட்சிகள் கூறிவரும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சமஷ்டி, இருதேசம், போர்க்குற்றம், சர்வதேச விசாணை, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, அபிவிருத்தி போன்ற வழியற்ற வாய்ப்பாடுகளைத் தவிர குறிப்பிடத் தக்கதாகப் புதிதாக எதுவுமில்லை. கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கூடப் பஞ்சாங்கங்கள் தான். திகதிகள் நேரங்கள் விடயங்கள் முன்பின்னாக மாறும் அவ்வளவே. 13 ஆம் திருத்தத்தை ஏற்கும் தலைவர்கள் கூட அதனை உறுதியாக உரத்துக்கூறத் தயங்கும் நிலையே உள்ளது. ஒற்றையாட்சியை எதிர்ப்போர் கூட தேவைக்கேற்ப அதனுடன் சமரசம் காணுவதற்கான காரணங்களை தயாராக வைத்திருப்பர். டக்ளஸ் உட்பட எல்லாக் கட்சியினரும் போலித்தேசியவாதிகளுக்கு வாக்களிக்காதீர்கள் என்று கூறிவருகிறார்கள் அப்படியானால் யார் அசல் தேசியவாதிகள்? பத்து உறுப்பினர்களைத் தந்தால் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டி விடுவேன் என டக்ளஸூம் சொல்லுகிறார். கஜேந்திரகுமாரும் சொல்லுகிறார். ஆனால் 22 இருந்தும் ஒற்றையும் புரட்ட முடியவில்லை என்பதுதான் வரலாறு. இவர்களது உண்மையான கொள்கை மற்றக்கட்சிகளில் பிழைபிடித்து தமது பதவிகளைத் தக்கவைப்பதேயன்றி வேறொன்றையும் இதுவரை காணவில்லை என்பதே தமிழ் மக்களின் பட்டறிவு.

தமிழ்க் கட்சிகளில் மாற்றமில்லை. அக்கட்சிகளின் பிரதான வேட்பாளர்களில் மாற்றமில்லை. கொள்கைகளிலும் மாற்றமில்லை. அதனால் இந்தத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் தலைகளிலும் பெரிய மாற்றங்கள் நிகழப் போவதில்லை. ஒரு கட்சியில் ஒன்று குறைந்து இன்னொரு கட்சிக்குச் ஒன்று கூடும். ஒரு சில புதிய முகங்கள் வரக்கூடும். அதனால் ஒன்றும் மாறப்போவதில்லை. ஆனால் ஒரு மாற்றம் நிகழ்வதற்கான வாய்ப்பு உள்ளது என்பது உறுதி. வடக்கு கிழக்கில் உள்ள தேர்தல் மாவட்டங்களில் குறைந்தது ஒவ்வொரு உறுப்பினரைப் பெறுவதற்கும் இம்மாவட்டத்தைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் தேசியப் பட்டியல் மூலம் மேலும் சில தமிழ் உறுப்பினர்களை நியமிப்பதன் மூலமும் வடக்கு கிழக்கில் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி மாறுவதற்கு முயலும் என்பதே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் விருதுவிழா-2024

**- குரு அரவிந்தன்**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 'விருது விழா -2024' 26-10--2024 அன்று ஸ்காபரோ சிவிக்சென்றர் மண்டபத்தில் இணையத்தின் தலைவர் திரு. கனகசபை ரவீந்திரநாதன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெறற்றது. 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 31 ஆண்டுகளாக கனடிய மண்ணில் சிறப்பாக இயங்கிவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணை யத்தின் தலைவர்களாக திரு. தெ.சண்முகராசா, திரு. திரு மாவளவன், திரு. வி.கந்தவனம், திரு. சின்னையா சிவநே சன், திரு.ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு.சிவபாலு தங்கராசா, திரு. சின்னையை சிவநேசன், திரு.சி. சிவநாய கமூர்த்தி, பேராசிரியர் திரு.இ. பாலசுந்தரம், திரு.குரு அரவிந்தன், திரு. அகணி சுரேஸ், திரு.க. ரவீந்திரநாதன் ஆகியோர் பணியாற்றியிருந்தனர்.



ஒருவர் வாழும்போதே அவரைக் கௌரவிக்கும் முகமாக அவர்கள் தமிழ் மொழி மற்றும் தமிழ்க்கலாச்சார வளர்ச்சிக்காக ஆற்றிய அரிய சேவைகளைப் பாராட்டி இந்த 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கும் நிகழ்வு இடம் பெற்றிருந்தது. இந்த விருதுகளைப் பெறுவதற்காகக் கனடா தமிழ் சமூகத்தில் இருந்து மதிப்புக்குரிய ஆறு பெரியோர்களை செயற்குழுவினர் தெரிவு செய்திருந்தார்கள். பண்டிதர் திரு. ச.வே பஞ்சாட்சரம், கலாநிதி திருமதி கௌசல்யா சுப்பிரமணிய ஐயர், தேசபாரதி திரு. வே. இராசலிங்கம், எழுத்தாளர் திரு. முருகேசு பாக்கியநாதன், பத்திரிகை ஆசிரியர் திரு. நாகமணி லோகேந்திரலிங்கம், கலைஞர் திரு. வயிரமுத்து திவ்வியராஜன் ஆகியோரே இதற்காக இம்முறை தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடாப்பண், தமிழ்தாய் வாழ்த்து, அகவணக்கம் ஆகியன இடம் பெற்றன. உப தலைவர் திரு. குரு அரவிந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து கலைக்கோயில் மாணவிகளின் வரவேற்பு நடனமும், தொடர்ந்து திரு. க. ரவீந்திரநாதனின் தலைவர் உரையும் இடம் பெற்றன. அடுத்து செல்வன் தருண் செல்வம், செல்வி வைஸ்ணவி சதானந்தபவன் ஆகியோரது உரையும், காப்பாளர் திரு. எஸ். பத்மநாதனின் உரையும் இடம் பெற்றன.

அடுத்து விருது விழா - 2024 மலரைத் தொகுப்பாசிரியர் திரு. குரு அரவிந்தன் வெளியிட்டுவைக்க, தலைவர் திரு. ரவி கனகசபை பெற்றுக் கொண்டார். வெளியீட்டுரையில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வரலாறு சுருக்கமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக் குரு அரவிந்தன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து விருது வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. விளம்பரதாரர்களும், தன்னார்வத் தொண்டர்களும், நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களும் கௌரவிக்கப்பட்ட பின், செயலாளர் முனைவர் திருமதி வாசுகி நகுலராஜா அவர்களின் நன்றியுரை இடம் பெற்றது. நிகழ்ச்சித் தொகுபாளர்களாக திருமதி ஜோதி ஜெயக்குமார், திரு அகணி சுரேஸ் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றியிருந்தனர். ●

---

# வியுக்தியார் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** 'ஒற்றையாட்சியை தமிழரே விரும்பி ஏற்கச் செய்யும் வரலாற்று துரோகம் இடம்பெறவுள்ளது. அநுர குமாரவின் இந்த சதித் திட்டத்தை முறியடிக்கும் ஒரே தரப்பு நாங்கள்தான். எனவே, எம்மில் 10பேரை பிரதிநிதிகளாக அனுப்ப மக்கள் ஆணை வழங்க வேண்டும்" - இவ்வாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரியுள்ளாரே. அப்படி அவர் கோருகின்றதுபோல பத்து பிரதிநிதிகளைக் கொடுத்தால், நமது தமிழ் தேசத்தை மீட்டுத் தந்துவிடுவார் என்று நினைக்கிறீர்களா?.

**வியுக்தியார்:** பத்துப் பிரதிநிதிகள் அல்ல இரண்டாயிரத்தில் இருபத்தியிரண்டு பிரதிநிதிகளையும் தமிழர் தேசத்தின் பெரும்பகுதியை தமது ராணுவ பலத்தால் தமது கட்டுப்பாட்டிலும் விடுதலைப் புலிகள் வைத்திருந்தார்கள். அந்த இருபத்திஇரண்டு பிரதிநிதிகளில் இவர்கள் கட்சியினர் மூவரும் இருந்தார்கள். தேசத்தை அடைய முடியவில்லை என்பது மட்டும் அல்ல, இறுதி யுத்தத்தை நிறுத்தவோ ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதை நிறுத்தவோ முடியவில்லை. இப்போது பத்து பிரதிநிதிகள் இருந்தால், ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளும் துரோகத்தை செய்யமாட்டோம் என்றுதான் சொல்கிறார். தங்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் தந்தால், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று சொல்லும் ஈபிடிபியும் சுயாட்சியை பெற்றுத்தருவதாகத்தான் கூறிவருகின்றது. எனவே இவர் சொல்வதுபோல ஒற்றையட்சியை ஏற்கும் சதித்திட்டத்தை முறியடிக்கவோ அல்லது அதனைப் பெற்றுத்தரவோ முடியுமோ தெரியவில்லை. ஆனால் மனுசன் மற்றவர்களைப்போல இல்லாமல் எப்போதும் ஒரே விசயத்தைத்தான் எங்கு போனாலும் சொல்கிறார். அதுதான் அவரது தனித்தன்மையே தவிர, அவர் சொல்கிறார் என்பதற்காக அதனை பெற்றுத்தந்து விடுவார் என்று உங்களை நம்பவைக்க நான் தயாராக இல்லை.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தின் செயல்திட்டத்தை மறுசீரமைப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கையை எவ்வித மாற்றமுமில்லாமல் தொடர்கிறார் என்றும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள் என்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே. அவர் சொல்வது சரியானதுதானே?

**வியுக்தியார்:** அவர் சொல்வது இரண்டும் சரியானதா என்பது தெரியவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் செயல்திட்டத்தை புதிய ஜனாதிபதி மாற்றமில்லாமல் தொடர்வது சரியானதுதான். அதற்காக மக்கள் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள் என்பது சரியானதா என்பது தெரியவில்லை. அப்படி ஏமாற்றமடைந்திருக்கிறார்கள் என்றால், பாராளுமன்ற தேர்தல் முடிவு வந்த பின்னர் அது சரியா பிழையா என்பது தெரிந்துவிடும்தானே. ஆனால், பதினைந்தில் தோல்வியடைந்து வீட்டுக்குப்போன ராஜபக்சக்கள், நல்லாட்சி அரசாங்கத்தின் பின்னர் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், தமது பழைய ஆட்சியையே உடனடியாக கொண்டு வந்ததால்தானே நாடு மிக வேகமாகவே வங்குரோத்து நிலைக்கு வந்தது. மணிக்கு நூற்றி இருபது கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் வாகனத்தை, உடனடியாக வேறு திசைக்கு மாற்றவேண்டும் என்றால், வேகத்தைக் குறைத்து பொருத்தமான இடத்தில்தானே திருப்ப முடியும், இவர் சொல்வதுபோல, அதாவது அவர்கள் நல்லாட்சி அரசிலிருந்து தமது திசைக்கு திருப்பியதுபோல புதிய ஜனாதிபதியையும் திருப்பச் சொல்கிறாரோ தெரியவில்லை.

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** மாவீரர் தினத்தை முன்னிட்டு துயிலும் இல்லங்களில் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக துப்புரவுப்பணி நடைபெற்றது. அதேபோல கிளிநொச்சியிலும் கனகபுரம் துயிலும் இல்லம் முன்னாள் எம்.பி. சிறிதரன் தலைமையில் துப்பரவு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்படி மாவீரர்களை வருடத்தில் ஒருதடவையாவது நமது அரசியல்வாதிகள் நினைக்கின்றார்கள் என்று நீங்கள் மகிழ்ச்சியடைந்தது உண்டா?

**வியுக்தியார்:** மகிழ்ச்சி அடையாமல் இருக்கமுடியமா என்ன? இவர்கள் இப்படி வருடத்தில் முன்னூற்றி அறுபத்திஐந்து நாட்களில் இந்த மாவீரர் வாரத்தில் வருகின்ற ஆறு நாட்களைத் தவிர்த்து மிகுதி நாட்கள் எல்லாம், அந்த மாவிரர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்துகின்ற விதத்தில் நடந்துகொள்ளும்போது கவலைப்படும் நாங்கள், இப்படி ஆறு நாட்களாவது அவர்களை இவர்கள் நினைப்பதை எண்ணி மகிழ்ச்சியடையத்தானே வேண்டும். மாவீரர் வாரம் என்பது போராட்டத்தில் மரணித்தவர்களின் நினைவாக பொதுவான ஒரு வாரத்தில் நினைவு கூரப்படுவது. ஆனால், நாம் ஒவ்வொருவரும் நமக்கு வேண்டியவர்களை அவர்கள் மரணித்த நாளை அல்லது அவர்கள் மரணித்த திதியையே நமது சமய ஒழுங்குகளில் நினைவுகூருகின்றோம். மாவீரர் வாரம் என்பது பொதுவான அஞ்சலி நாளாக இருந்தாலும், ஒவ்வொருவரையும் அவர்கள் மரணித்த நாட்களிலும் நினைவுகூரத்தக்க வகையில் இந்த துயிலும் இல்லங்களை எப்போதும் துப்பரவாக வைத்திருக்கவேண்டும் என்று எந்தத் தலைவர் முதலில் யோசிக்கிறார் என்பதை பார்க்க ஆவலாக காத்திருகின்றோம்.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருப்பதை தேர்தலின் பின்னர் பார்க்க முடியும் என்றும், அனுர அரசாங்கமும் சிங்களத் தேசியவாதத்தையே பின்தொடர்கிறது என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளாரே. அவர் ஏன் அப்படிச் சொல்கிறார் என்று புரியவில்லையே. மக்கள் தமது கோபத்தை காட்டுவதற்கு, தென்னிலங்கை தேசியக் கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள் என்று சொல்கிறாரோ?

**வியுக்தியார்:** தமிழ் தேசியக்கட்சிகள் இப்போது தனித்தனியாக பிரிந்து நிற்பதை தமிழ் மக்கள் விரும்பவில்லை என்பது உண்மைதான். அதற்காக தேர்தலின் பின்னர் அவர்களின் கோபம் பிரதிபலிக்கும் என்கிறார். அந்தக் கோபத்தை வெளிக்காட்ட மக்கள் தேசியக்கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள் என்று அவர் சொல்கிறாரா? அல்லது ஏற்கனவே இருக்கும் கட்சிகளிடையே ஐந்து கட்சிகளாவது ஒரணியாக செய்படுகின்றன என்பதால், தமது அந்த ஐந்து கட்சிக்கூட்டணிக்கு வாக்களிப்பதன் மூலம் தனித்தனியாக நிற்கும் கட்சிகளை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்கள் என்று கூறுகிறாரா என்பது தெரியவில்லை. அப்படிக் கூறுவதாகவே நாம் நம்புவோமே.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** இனப்பிரச்னையை தீர்க்கும் நோக்கில் உருவாக்க வேண்டிய இலங்கை தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் - சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் - என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதே. இப்படியொரு விடயத்தை ஏற்றுக்கொள்ளும் அரசியலமைப்பு ஒன்று புதிதாக உருவாகுவது சாத்தியமாகுமா?

**வியுக்தியார்:** அட நீங்கள் வேறு. லொத்தர் சீட்டிழுப்பு ஒன்றை வாங்கும்போது முதலாவது பரிசு (அது கோடிகளில்தான் இருக்கும்) கிடைக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு, அல்லது நம்பிக்கொண்டுதானே வாங்குகின்றோம். இரண்டாம் பரிசு, முன்றாம் பிரிசு கிடைக்க வேண்டும் என்று எப்போதாவது நினைப்பதுண்டா?. அதுபோலத்தான், நினைப்பதை அதி உச்சமாக நினைப்பதில் என்ன தவறு?. இந்தக் கூட்டணியில் இருக்கின்ற மூன்று கட்சிகளின் தலைவர்கள் நல்லாட்சி அரசு காலத்தில் எம்.பி.க்களாக கூட்டமைப்பில் இருந்தவர்கள். (சுரேஸ்சியின் செயலாளரான சிவசக்தி ஆனந்தன் இருந்தார்) அப்போது அவர்களின் கட்சியைச் சேர்ந்த ஒருவர்தான் புதிய அரசியலமைப்பையே தயாரிப்பதாக கூறினார்கள். அப்படித் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பிலேயே வடக்கு கிழக்கு இணைக்கப்படவில்லை. ஒற்றையாட்சி நீக்கப்படவில்லை. (ஒற்றையாட்சி என்பதை எக்க ராஜ்ய என்ற சிங்கள பெயரில் மறைத்தது வேறு சங்கதி). இப்போது இப்படிக் கேட்பதை எதற்காக பெரிசாக எடுக்கிறீர்கள்?.

---


**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** வடக்கு மக்கள் சஜித் பிரேமதாஸ மீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் சான்றாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளாரே. அப்படியெனில் நடக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தலிலும் அவரது கட்சியினர்தான் வெல்வார்கள் என்கிறாரா?

**வியுக்தியார்:** உண்மைதான். இதற்கு முதலில் இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலிலும் வடக்கு மக்கள் அவருக்குத்தான் வாக்களித்தனர். அதாவது மூன்று லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாக்களித்தனர். ஆனால் அதற்கு பின்னர் நடந்த பாராளுமன்ற தேர்தலில் சஜித் கட்சி பதின்மூவாயிரம் வாக்குகளைத்தான் பெற்றது. அந்த சமாச்சாரம் அவருக்கு தெரியாதுபோலும். அது சரி அப்போது அவர் ராஜபக்சக்களுடன் அல்லவா இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் சின்னம்



X 4

சுயேச்சைக் குழு - 2



கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள் சமூக நலன் மேம்பாட்டிற்காக கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என மக்களுக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது.

# E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

தந்தை வழியில் தனையனும், மண்ணையும் மக்களையும் நேசிப்பதுடன் அரசியல் மூலம் மக்கள் பணிக்காக, ஆளுமையுள்ள இளைஞனாக, தலைமைத்துவம், முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என ஐந்து அம்ச அனுபவத்துடன் களத்தில் கமல்.

**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்கள் எதிர்பார்க்கும் ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமை மிக்கவர்களும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் தருணத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் வினைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் விடுத்து நேர்மையான வினைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ-ம்: கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**பாராளுமன்ற தேர்தல் - 2024,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால்பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் 2020ஆம் ஆண்டு முதலே மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதியும் பொறுமையுடன் அவதானித்து வந்தார். பின்னர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்திய போதும், 2025ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கை நோக்கி பயணித்த வேளையில், 2024ஆம் ஆண்டு எமக்கான நேரம்...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் அணியை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு அவசியம். காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டுமே மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நோக்கி...

**சுயேச்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன், எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பற்றாக்குறையே எனது சுயவிருப்பத்துடன் அரசியல் அறவழிப் பிரவேசம்...

**அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும், அரசியல் தீர்வும்:** சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் மற்றும் போராட்டங்கள் அறம் சார்ந்தவையாகவும், சுயாதீனமாகவும் ஓர் சீரான தலைமைத்துவ கட்டமைப்புடன் காணப்பட்டது. பேரினவாதம் மற்றும் பிரிவடைகின்ற தமிழ்த்தேசிய கட்சிகளினதும் வினைத்திறனற்ற செயலை மாற்றியமைத்தல். பெண் பிரதிநிதித்துவம், தொகுதி அடிப்படையிலான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை ஷமுதன்மைப்படுத்திய ஓர் கட்டமைப்பு...
அரசியல் தீர்வு என்ற போர்வையில் இழுத்தடிப்புக்களும், அபிவிருத்தி என்ற போர்வையில் திணிப்பு மற்றும் ஊழல் ஆட்சியே காணப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சரியான நீரோட்டத்தில் இரண்டற பயணிக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க ஆளுமையுள்ள புதியவர்களை உள்ளடக்கிய மாற்று அணி தேவை...

**முயற்சியாண்மை:** வளமான நிலம், உழைக்கக்கூடிய மக்கள் தமிழர் பரப்பில் உள்ள நிலையில் தேவைப்பாடான மூலதனம் மற்றும் முயற்சியாண்மை கேள்விக்குறியாகவே உள்ளது...
இதற்காக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய பாரம்பரிய தொழில்களை மேம்படுத்துவதோடு சேவைத்துறைகளை (உ-ம்: சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல்) மையப்படுத்திய மூலதனம் மற்றும் முயற்சியாண்மைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல்...

**கல்வி:** ஆரம்பக்கல்வி, பாடசாலை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு அவற்றை இடைவிடாது தொழில் சார்ந்து பயணிக்ககூடிய வகையில் தொழிற்கல்வியை வழங்குதல்...
வாழ்வியல் தொடர்பான கல்வி நடவடிக்கைகள், ஆரோக்கிய வாழ்வு (சுகாதாரம்), போக்குவரத்து, பிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு என பலதரப்பட்ட கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்...

**விளையாட்டு:** மாணவப்பருவத்துடன் விளையாட்டில் உள்ள தமது ஆர்வத்தை இடைநிறுத்தாது சுய ஒழுக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்வியல் மற்றும் வணிக ரீதியாக செயற்படக்கூடிய ஓர் கட்டமைப்பை உருவாக்கல்...
கிராமம் முதல் நகரம் வரை விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஓர் மையத்தினை (உ-ம்: மைதானங்கள்) ஏற்படுத்துவதன் மூலம் சமூக ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்தல்...

**கலை-கலாசாரம்:** எமது கலைச்செயற்பாடுகளை தொடர்ந்து நிகழ்த்துதல், புத்தாக்க செயற்பாடுகள், மீள் உருவாக்கம் என்ற அடிப்படையில் கட்டமைத்து தமிழர் பரப்பின் அடையாளமாக மாற்றியமைத்தல். மேலும் கலைஞர்களுக்கான அங்கீகாரத்தையும் எமது கலைகளையும் சர்வதேச மட்டம் வரை எடுத்துச் செல்லல்...
தமிழர் கலாசாரம் என்பது உலகெங்கிலும் போற்றப்படும் ஓர் விடயம். அதனது சுயாதீனத்தை இழக்காது தமிழர் பரப்பில் காணப்படும் கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்தல்...

**சுயேச்சை வேட்பாளர்**
பேரினவாதத்திற்கும், தமிழர் பரப்பில் உள்ள கட்சிகளின் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே எனது அரசியல் பிரவேசம். அறவழியில் சுயவிருப்பத்துடன் தேர்தல் களத்தில் மேற்கூறப்பட்ட ஐந்து அம்ச ஆளுமையுடைய எனது வருகை மாற்றத்தை நோக்கி, மாற்று சிந்தனையுடன், மாற்று வழியில், மாற்றத்திற்கான நம்பிக்கை...

**"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன் எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்"**

களத்தில் கமல்

மாற்றத்திற்கான நம்பிக்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- கண்ணால்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

செயல்படுத்தியதாகத் தெரியவில்லை. அது முழுவதும் சந்திரிகா அரசாகவே இருந்தது. எனவே அரசு நிர்வாகம், ஆளும் வர்க்க தொடர்புகள், பதவிகள் எல்லாம் ஜேவிபிக்கு பழக்கம் தான். பிடிவாதமாக தனது கொள்கைகளில் நிற்காமல் ஆளும் வர்க்கங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுப்பதும் திசநாயக்கவின் ஜேவிபிக்கு வழக்கம் தான். இதில் இறுதி ஆணியை அடித்தது அமெரிக்கா.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் 19 அன்று அமெரிக்க தூதர் ஜூலி சுங் ஜேவிபியின் தலைமை அலுவலகம் வந்து திசநாயக்கவை சந்தித்தார்.

விமல் வீரவன்சா என்ற சிங்கள தேசியவாத பாராளுமன்ற உறுப்பினர் ஒரு விவாத மேடையில் இலங்கை அரசியலில் அமெரிக்கா தலையிடுகிறது. அமெரிக்கா ரணில் விக்ரமசிங்கவை அதிபர் ஆக்க விரும்புகிறது. முடியாத நிலையில் அனுரா குமார திசநாயக்கவை அதிபர் ஆக்க உறுதி கொண்டிருக்கிறது என்றார். அந்த வீடியோ மர்மமாக இணையத்தில் இருந்து மறைந்து விட்டது என்கிறது **Tamil Guardian – Weerawansa caims US ambassador is interfering in Sri. Lankan elections** என்ற கட்டுரையில்.

ஜூலி சுங் பலமுறை தேசிய மக்கள் சக்தி அலுவலகத்துக்கு வந்துள்ளார். யுஎஸ் எய்ட் அட்மினிஸ்ட்ரேட்டர் சம்ந்தா பவர், ஹரிணி அமரசூர்யவை சந்தித்தார் என்கிறார் விமல். ஜூலி சுங் இலங்கைக்கான அமெரிக்க தூதராக இருந்தார். அவரது பதவி காலம் முடிந்தும் இலங்கையில் இருந்து இந்த வேலைகள் செய்து வருகிறார். இதில் அதிர்ச்சிகரமாக 2022 போராட்டங்களிலும் ஜூலி சுங் பங்கு வகித்தார் என்கிறார் விமல். அதாவது திவாலான கோத்தபய அரசை கவிழ்ப்பதிலும் அமெரிக்கா பங்கு வகித்தது என்கிறார் விமல். வங்கதேசத்தில் ஷேக் அஸீனாவின் அரசுக்கு ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்னைகளுக்குக் காரணமான அமெரிக்காவே அவரது அரசைக் கவிழ்த்தது நினைவிருக்கும்.

இந்த சந்திப்பிற்குப் பிறகு அனுரா அமெரிக்கா சுற்றுபயணம் மேற்கோண்டார். இதற்கான செலவுகளை அமெரிக்க தூதரகம் செய்தது என்ற வதந்தி பரவலாக இருந்தது. அதை அமெரிக்க மறுத்தது. அதன் பின்பு அனுரா முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், உலகமயம் தாராளமயம் பற்றியெல்லாம் பேசுவதே இல்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா வரும்படி அனுராவுக்கு மோடி அரசு அழைப்பு விடுத்தது. அனுரா திசநாயக்க இந்தியா வந்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் போன்றோரை சந்தித்தார். பின்பு இலங்கை திரும்பிச் சென்ற அனுரா அதானி குழுமத்தின் வெற்றியை இலங்கையிலும் செயல்படுத்தப் போவதாகக் கூறினார். இந்திய விரிவாதிக்கத்துக்கு எதிரான அரசியலை முழுமையாகக் கைவிட்டு இலங்கை இந்திய உறவுகளைப் பேணுவதைப் பற்றிப் பேசினார். இந்தியாவுடனான உறவை மேலும் வலிமைப்படுத்த உறுதி கொண்டிருப்பதாகவும் கூறினார்.

எனவே அமெரிக்கா, இந்தியா, ஐ எம் எஃப், இலங்கையில் முதலீடு செய்துள்ள நிறுவனங்கள், ஆகியோரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு அனுரா குமார திசநாயக்க இலங்கையின் அதிபர் ஆவது உறுதி செய்யப்பட்டது. ஜே வி பி தன்னிடம் மிச்சம் மீதியிருந்த சோஷலிச லட்சியங்களை முழுதாகக் கைவிட்டுவிட்டு இலங்கையின் முதலாளித்துவ அமைப்பு முறைக்கு உள்ளே வந்த பின்பே அனுர குமார திசநாயக்க அதிபர் ஆக மேற்சொன்ன நாடுகளும், அதிகார மையங்களும் ஒப்புதலளித்தன.

அதாவது எதுவுமே மாறாது என்பதை இந்த நாடுகளும் நிறுவனங்களும் உறுதிப் படுத்திக் கொண்ட பின்பே இந்த மாற்றத்தை ஏற்படுத்தின.

இலங்கை சிவந்தது. இலங்கையின் உழைக்கும் மக்கள் தங்கள் அரசை ஏற்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுவதை அமெரிக்க, இந்திய, இலங்கை ஆளும் வர்க்கங்கள் கைதட்டி ஆமோதிக்கின்றன. இப்போது இருப்பது உங்கள் அரசு என்று இவர்கள் உழைக்கும் மக்களிடம் சொல்கின்றனர். இன்னொரு நாடகம் அரங்கேறுகிறது.

(உயிர்மெய்)

## சுற்றுலாவிகளின் வருகை 16 இலட்சத்தைக் கடந்தது

கொழும்பு, நவ. 03

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கைக்கு வருகைத் தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இதன்படி, நாட்டை வந்தடைந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்து ஆயிரத்து 949 ஆகும் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(ஐ)

## டிஜிற்றல் மயமாகும் நலன்புரி திட்டங்கள்

கொழும்பு, நவ. 03

நாட்டில் முன்னெடுக்கப்படும் சமூக நலன்புரிப் பலன்களை வழங்கும் வேலைத்திட்டங்களை டிஜிற்றல் மயமாக்குவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நடைபெற்றது.

அரிசி விலையை ஸ்திரப்படுத்தல் மற்றும் அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து நீண்டகால தீர்வு காண்பதற்கு நெல் களஞ்சிய கட்டமைப்பை டிஜிற்றல் மயமாக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் அஸ்வெசும மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக நலன்புரித் திட்டங்கள் உள்ளிட்ட சேவைகளை டிஜிற்றல் மயமாக்குதல் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

எதிர்வரும் புதிய பாடசாலை தவணையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ள நிவாரண விநியோகத் திட்டம் மற்றும் உர மானியத் திட்டம் என்பனவற்றை டிஜிற்றல் மயமாக்குவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

(எ)

# இன்னொரு முக்கியமான சவாலை கையாளும்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை மாகாணசபைகள் விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற உள்ளூர் விவகாரங்களில் ஓரளவு அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், சுவிஸ் கன்ரோன்களுடன் ஒப்பிடும்போது எமது மாகாணசபை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன.

இலங்கைக்கு அதுவும் குறிப்பாக ‘முறைமை மாற்றம்’ ஒன்றுக்கான கோரிக்கை மக்களிடம் இருந்து வந்திருப்பதுடன் இனத்துவ சிறுபான்மைச் சமூகங்கள் அதிகாரப் பரவலாக்கத்தை வேண்டிநிற்கின்ற நிலையில் பன்முகப்படுத்தப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்கான தேவை முன்னெப்போதையும் விட பெருமளவுக்கு அவசியமாகிறது. பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள் வெளியேறிய பிறகு ஆட்சிவழக்கில் இருந்துவரும் மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை வகைமாதிரி கணிசமான அரசியல் மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வை தோற்றுவித்துவிட்டது.

வளர்ச்சியினதும் நவீனமயமாக்கத்தினதும் சந்தடிமிக்க மையமாக கொழும்பு அபிவிருத்தியடைந்திருக்கும் அதேவேளை, பல மாகாணங்கள் பொருளாதார ரீதியில் ஓரங்கட்டப்பட்டிருப்பதுடன் உள்ளூர்ப் பிரச்னைகளை செயல்விளைவுடன் கையாளுவதில் மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றலுடன் அரசியல் ரீதியாக அதிகாரமற்றவையாகவும் இருக்கின்றன. மத்தியமயப்படுத்தப்பட்ட தீர்மானம் எடுக்கும் செயன்முறை நாடுபூராவுமுள்ள பல்வகைப்பட்ட இனத்துவ மற்றும் பிராந்திய சமூகங்களின் தேவைகளைக் கையாளுவதற்கு போதுமானதாக இல்லை என்பது பெரும்பாலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரித்து சமூக அமைதியின்மைக்கு தூண்டுதலளிக்கிறது.

உதாரணமாக, விவசாயம், உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட கொள்கைகள் உள்ளூர் தேவைகளின் அடிப்படையில் மாகாணத்துக்கு மாகாணம் பொருத்தப்பாட்டிலும் அவசியத்திலும் பெருமளவுக்கு வேறுபடுகின்றன. மலையகத்தின் தேவைகள் கரையோரப் பகுதிகளின் தேவைகளில் இருந்து வேறுபடுகின்றன என்பது தெளிவானது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்கள் செயற்திறன் மிகுந்த நிருவாகிகளாக இருக்கலாம். ஆனால் அவர்களிடம் உள்ளூர்ப் பிரச்சினைகள் தொடர்பில் மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளுக்கு இருக்கின்ற நுண்ணியமான புரிந்துணர்வும் ஆழமான பற்றுறுதியும் இல்லை.

மாகாணசபை முறையின் நோக்கம் உள்ளூரில் மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளே தீர்மானங்களை எடுப்பதற்கு அனுமதிப்பதேயாகும். மாகாணசபை முறைக்கு புத்துயிர் கொடுத்து நிதி மற்றும் நிர்வாக சுயாட்சியுடன மாகாணங்களுக்கு அதிகாரமளித்தால் இலங்கையின் ஆட்சிமுறை புதிய யுகமொன்றுக்குள் பிரவேசிக்கமுடியும். அது சகல சமூகங்களினதும் அபிலாசைகளை நிறைவுசெய்வதாகவும் பிராந்திய அபிவிருத்தியை ஊக்குவிப்பதாகவும் அமையமுடியும்.

# வாழ்க்கையை எளிதாக்கு...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதும் தேவைக்குமேல் பொருட்களைக் குவித்துக் கொண்டு வாழ்வதில் என்ன கிடைக்கிறது நமக்கு? இந்தப் பண்பு, எவ்வளவு சம்பாதித்தாலும் போதாது என்ற வகையில் பொருட்செலவை ஏற்படுத்துகிறது என்பதும் உண்மை.

மனத்தில் பொருள் சேகரிக்கத் தோன்றும் ஆசையை அடக்கிக் கொண்டு, தேவையில்லாத பொருட்களைத் துறந்துவிட்டால் வாழ்க்கை எளிதாகும்.

‘யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்’ என்று வள்ளுவர் அன்றே இதைக் கண்டு பிடித்துச் சொல்லிவிட்டார்.

எது தேவையில்லாதது என்று எப்படிக் கண்டுபிடிப்பது என்பதை அறிய ஒரு வழிமுறை உண்டு. உங்கள் வீட்டில் இருக்கும் அனைத்துப் பொருட்களையும் ஓர் அறையில் அடைத்துவிடுங்கள். பிறகு மறுநாளிலிருந்து உங்கள் இயல்பான வாழ்க்கையை வாழத் தொடங்குங்கள்.

உதாரணமாக காலையில் விழித்ததும் பல் துலக்கத் தேவையான பற்பசை, பிரஷ் போன்றவற்றை அந்த அறையிலிருந்து எடுத்துப் பயன்படுத்துங்கள். இவ்விதம் தேவைக்கு ஏற்ற பொருளை மட்டும் அறைக்குள்ளிருந்து ஒவ்வொன்றாக வெளியே எடுத்துப் பயன்படுத்திவிட்டு, எங்கு வைக்க வேண்டுமோ அங்கு வைத்துக் கொள்ளுங்கள். அதைப்போன்று உங்களுக்குத் தேவையானதை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துப் பயன்படுத்தத் தொடங்குங்கள்.

சமைக்கத் தொடங்கும்போது பாத்திரங்களை எடுத்தல், குளிக்கப் போகும்போது உடை, துண்டு போன்றவற்றை எடுத்தல், இரவு உறங்கப் போகும்போது தலையணை, போர்வை போன்றவற்றை எடுத்தல்- இப்படி ஒரு மாதம் அந்த அறையிலிருந்து பொருட்களை எடுத்து வாழுங்கள். அப்படி அறையிலிருந்து எடுத்த பொருட்களை உங்கள் இல்லத்தில் எங்கெங்கே வைக்க வேண்டுமோ அங்கங்கே வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு மாதம் முடிந்த பிறகு அடுத்த மாதம் பாருங்கள். ஏற்கெனவே நீங்கள் வெளியில் எடுத்து வைத்த பொருட்களைத்தான் மறுபடி மறுபடி பயன்படுத்திக் கொண்டிருப்பீர்கள்.

அதுசொல்லும் உண்மை என்ன? அப்படி நீங்கள் வெளியே எடுத்த பொருட்கள் மட்டுமே உங்கள் வாழ்வியலுக்குப் போதுமானது. மீதியெல்லாம் அநாவசியச் சுமை. ஒரு மாதம் எடுத்த பிறகும் அந்த அறையில் மீதமிருக்கும் பொருட்களில் தொண்ணூறு சதவீதப் பொருட்கள் உங்களுக்குத் தேவையில்லாத உபரிப் பொருட்களே.

இப்படியாக நாம் இதுவரை சேர்த்த பொருட்களில் தேவையில்லாததைக் கழித்துவிட்டால், கூடுதல் நிம்மதியோடு வாழலாம் என்று பரிந்துரை செய்கிறது ‘மினிமலிஸம்’ என்கிற இன்றைக்குப் பெரிதும் தேவைப்படுகிற அற்புதமான வாழ்வியல் கொள்கை.

நம் பெற்றோர் நமக்குக் கடிதம் எழுதும்போது, பெரிதும் அஞ்சலட்டையைத் தானே பயன்படுத்தினார்கள்? அதிகச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளத் தேவை இருந்தால்தானே இன்லண்ட் உறையை உபயோகித்தார்கள். அவர்களின் பண்பு நலன்கள் நம்மைவிட்டு ஏன் விலகிவிட்டன?

உணவு, உடை, உறையுள் என்ற மூன்றிலும் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டால் போதுமானது. மீதி அனைத்தும் ஆடம்பரமே.

எந்த ஒரு பொருள்பற்றும் இல்லாத, ஏன், ஆடை என்னும் அடிப்படைத் தேவை பற்றிய பற்றுக் கூட இல்லாத தொடக்க நிலையே மனித வாழ்வின் ஆதி நிலை. நம் முன்னோருக்கும் முன்னோர், வாழ்ந்த விதம் எளிமையின் உச்சம். அந்நிலையை இன்று நாம் அடைய இயலாதுதான். ஆனால் அத்தகைய முன்னோரின் வழிவந்த நாம், இத்தனை பயனற்ற பொருட்களைச் சுமந்து கொண்டு வாழ்க்கை நடத்துவது சரிதானா?

நிர்பந்தத்தின் காரணமாக மிக எளிய வசதிகளுடன் நிறைவாக வாழும் உயர்ந்த மனிதர்களை நாம் ஏழை என்கிறோம். உரிய கௌரவத்தை நாம் அவர்களுக்குத் தருவதும் இல்லை.

அளவான பொருட்களை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்வோர் ஏழைகள் அல்லர். அவர்களே மிகச் சரியாக வாழ்க்கை நடத்துகிறவர்கள். இதை அவர்களே கூட உணர்ந்து பெருமிதம் கொள்வதில்லை. உண்மையில் இந்த உலகில் உரிமையுடன் வாழத் தகுதி படைத்தவர்கள் அத்தகையவர்களே.

தேவையான பொருட்களைக் கட்டாயம் வாங்குவோம். அதில் கஞ்சத்தனம் அவசியமில்லை. ஆனால் தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிக்காதிருப்போம். அந்தக் கோட்பாட்டில் கறாராக இருப்போம்.

‘குறைந்த பொருட்கள், அதிக சௌகரியம்’ என்ற கோட்பாடு, ரயில் பயணத்தை மட்டுமல்ல, வாழ்க்கைப் பயணத்தையும் எளிதாகவும் நிம்மதி நிறைந்ததாகவும் மாற்றுகிறது என்பதைப் புரிந்துகொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதிக்கு...

புலனாய்வு பிரிவுகளின் பரிந்துரைக்கமையவே இந்த வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் வாகனத்துக்குரிய எரிபொருள் செலவை தேசிய மக்கள் சக்தியே ஏற்றுள்ளது எனவும் அதற்கு அரசாங்க பணம் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சி சார்ந்த பிரசாரத்தில் ஜனாதிபதி ஈடுபடுவதாலேயே அரச நிதியை அதற்கு பயன்படுத்தாமல் கட்சியின் நிதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. (அ)

## ராஜபக்ஷக்கள்...

இலங்கையில் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்மொழியப்பட்ட பிரேரணையை முற்றாக நிராகரித்திருப்பது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு அளித்த பதிலிலேயே பியெர் பொலிவ்ர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

'தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டும். நாம் ராஜபக்ஷாக்களை சர்வதேச அரங்கில் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கொன்சவேட்டிவ் கட்சியின் ப்ரியன் மல்ரொனியே முதன் முறையாக தமிழர்களுக்கு கனடாவுக்குள் இடமளித்ததாகவும், தமது கட்சியைச் சேர்ந்த ஜோன் பெய்ர்ட் மற்றும் ஸ்டீவன் ஹார்பர் ஆகியோர் கடந்த கால அரசாங்கத்தினால் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ள பியெர் பொலிவ்ர், எனவே இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் கொன்சவேட்டிவ் கட்சி நீண்ட காலமாக நேர்மறையான விதத்தில் செயற்பட்டு வந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி தமிழினப்படுகொலையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## பொதுக்...

செய்யப்பட்டு நிகழ்வை விளம்பரப்படுத்தும் பதாகைகள் மற்றும் போஸ்டர்கள் பரவலாக ஒட்டப்பட்டு காணப்படுவதோடு குறித்த பகுதியை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் துப்பரவு செய்யும் பணிகள் நடைபெற்றன.

இந்நிலையில், தேசிய மக்கள் சக்தியின் பொதுக்கூட்ட நிகழ்வை விளம்பரப்படுத்தும் முகமாக பதாகைகள் மற்றும் போஸ்டர்கள் தேர்தல் விதிமுறையினை மீறி காணப்படுவதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தேர்தல் கண்காணிப்பாளர்களால் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து குறித்த இடத்திலிருந்து பதாதைகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

## தமிழ் அரசின்..

தேர்தல் விஞ்ஞாபனத்தை கைய ளித்து உத்தியோகபூர்வமாக அதனை வெளியிட்டு வைத்தார்.

கட்சித் தலைவரின் இல்லத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வேட்பாளர் இம்மனுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## 3மாதங்களில்...

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டிய வரப்பிரதாசங்கள் , பாதுகாப்பு எல்லாம் வழங்கப்பட்டுள்ளன. அளவுக்கு அதிகமாக எதையும் வழங்க வேண்டியதில்லை. 180 இராணுவத்தினர், படையினர் எல்லாம் எதற்கு? தேவையற்ற விடயங்களை வழங்கவேண்டியதில்லை.

இந்த அரசாங்கத்தால் பயணிக்க முடியாது என ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு காண்கின்றார். இதற்கு முன்னரும் அவர் கனவு கண்டார். டொலர் 400 ரூபாவரை அதிகரிக்கும் என்றெல்லாம்கூட கூறினார். இன்று டொலர் பெறுமதி குறைவடைந்துள்ளது. கனவு காணும் உரிமை அவருக்கு உள்ளது. நன்றாக கனவு காணட்டும்.

எதிர்க்கட்சி தலைவரும் நகைச்சுவைத்தனமான கருத்துகளை கூறிவருகின்றார். அவரின் கருத்துகளை மக்கள் ஏற்கமாட்டார்கள்-என்றார். (அ)

# கிழக்கு மாகாண ஆளுநரின் அழைப்பை நிராகரித்த அநுர

கொழும்பு, நவ. 03

கிழக்கு மாகாண ஆளுநர் விடுத்த அழைப்பினை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நிராகரித்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார ஏடு ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருகோணமலையில் நடைபெற்ற அரசியல் கூட்டம் ஒன்றுக்காக ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க வருகை தந்த போது அவரை கிழக்கு மாகாண ஆளுநர் அவரது அதிகாரபூர்வ இல்லத்துக்கு உணவு விருந்துக்காக அழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீங்கள் திருகோணமலைக்கு வருவதால் ஆளுநரின் அதிகாரபூர்வ இல்லத்துக்கு வாருங்கள் என அவர் அழைத்துள்ளார்.

எனினும், இந்த அழைப்பினை ஜனாதிபதி நிராகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுத் தேர்தல் பரப்புரை தொடர்பான அரசியல் சந்திப்புக்காக நான் வருகின்றேன். இந்த நேரத்தில் உங்களிடம் வருவது நல்லதல்ல. ஜனாதிபதியாக பொது நிகழ்வுகளில் பங்கேற்க வருகின்ற போது, ஆளுநரின் அதிகார பூர்வ இல்லத்திற்கு வருவேன் எனவும், அரசியல் கூட்டத்துக்கு வருகை தந்த பின்னர் ஆளுநரின் அதிகாரபூர்வ இல்லத்துக்கு உணவருந்தச் செல்வது ஏற்புடையதல்ல எனவும் அவர் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1,342 தேர்தல் விதிமீறல்கள் இதுவரை பதிவாகியுள்ளன!

கொழும்பு, நவ. 03

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 1,342 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 352 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதேநேரம், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய 990 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

# லொறி - வான் விபத்து; ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 03

நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் வானும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியா - நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் வேனும் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் வானில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் சமர்செட் தோட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கல்முனைப் பகுதியைச் சேர்ந்த அனிதா மொஹமட் அல்சார் (வயது 53) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கல்முனை சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த சிலர் நுவரெலியா நோக்கி பயணித்த போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது, வேனில் 18 பேர் பயணித்துள்ளதுடன், லொறியில் சாரதி மற்றும் உதவியாளர், பயணித்துள்ளதாகவும், எனினும், லொறியின் சாரதி மாத்திரமே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், விபத்தில் வேனும் லொறியும் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆட்சிசெய்யும் ஆற்றலை...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் நாட்டில் உறுதிப்பாடின்மையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள் " என்று அவர் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் தாக்குவதற்கு பொருளாதாரப் நெருக்கடி, விலைவாசி உயர்வு, அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் பயன்படுத்துகின்றன. ஆனால், இந்த பிரச்சினைகள் உருவாகுவதற்கு தேசிய மக்கள் சக்தி அல்ல ஜனாதிபதியை குற்றஞ் சாட்டுகிறவர்களே பெருமளவுக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார்கள்.

புதிய ஜனாதிபதி தனது நிலையை வலுப்படுத்தி அதிகாரத்தில் ஒழுங்காக அமருவதற்கு முன்னதாகவே அவருக்கு எதிராக தீவிரப்படுத்தப்படும் பிரசாரங்கள் சாமானியன் ஒருவன் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருப்பதை பழைய அரசியல் அதிகார வர்க்கத்தினால் ஜீரணிக்க முடியவில்லை என்பதை பிரகாசமாக வெளிக்காட்டுகிறது. ஆட்சிமுறை அனுபவக் குறைவு பற்றிய விமர்சனங்கள் எல்லாம் இதன் பிரதிபலிப்பேயாகும்.

தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அதிகாரப்பரவலாக்கம் உட்பட பல்வேறு பிரச்சினைகளில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுகள் தொடர் பில் கடுமையான விமர்சனங்கள் இருக் கின்றன. ஆனால், பாராளுமன்ற தேர்த லுக்கு பிறகு அந்த கட்சி உறுதியான ஒரு அரசாங்கத்தை அமைக்க அனுமதித்து திசாநாயக்கவின் தலைமையில் அது நாட்டை நிருவகிப்பதற்கு ஒரு கணிச மான கால அவகாசத்தை வழங்க வேண் டியது அவசியமாகும். அதற்கு பிறகு அவர் களது ஆட்சி பற்றிய விமர்சனங்களை செய்வதே முறையானதாகும்.

பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்துக்கு சேவை செய்த பழைய அரசு இயந்திரத்தை வைத்துக்கொண்டு முறைமை மாற்றத்தை அல்லது ஊழலற்ற நிருவாகத்தை நடத்துவதில் உள்ள அடிப்படைச் சிக்கல்களை குறுகிய காலத்திற்குள் ஜனாதிபதி திசாநாயக்க நன்றாக விளங்கிக் கொண்டிருப்பார். எது எவ்வாறிருந்தாலும், நடைமுறைச் சாத்தியமற்ற பெருவாரியான வாக்குறுதிகளை வழங்கிய அவர் அதன் விளைவான நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கவேண்டியே இருக்கும் என்பது நிச்சயம். பாராளுமன்றத்தில் ஒரு கணிசமான ஆசனங்களைப் பெற்று அவருக்கு நெருக்குதல்களை கொடுத்து ஆட்சி செய்யவிடாமல் குழப்பியடிப்பதற்கே எதிர்க்கட்சிகள் நோக்கம் கொண்டிருக்கின்றன எனபதை அவற்றின் தற்போதைய அணுகுமுறைகள் தெளிவாக வெளிக்காட்டுகின்றன.

## பிரான்ஸ்க்கு...

மாவட்ட விசேட குற்ற விசாரனை பிரிவின் பொறுப்பதிகாரி குணரோயன் தலமையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த மேமாதம் கிடைக்கபெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்புவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட, ஒட்டுமடம் தேவாலய வீதியைச் சேர்ந்த சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணை பிரிவில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் கடந்த ஜூலை மாதம் ஒருவரும், ஒக்ரோபர் மாதம் ஒருவரும் கைது செய்யப்பட்ட நிலையில் மூன்றாவது சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது, பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்புவதாக கூறி பிரதான முகவராக செயற்பட்டு, விடுதிகளில் தங்கியிருந்து பண மோசடிகள் செய்ததாகவும் கொழும்பில் தங்கியிருந்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்ததாகவும் தெரிய வந்தது.

இவருக்கு 2017ஆம் ஆண்டு மல்லாகம் நீதிமன்றில் பகிரங்க பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன், வவுனியா நீதவான் நீதிமன்றில் 1கோடி 29 இலட்சம் ரூபா மோசடி வழக்கில் தேடப்படும் பிரதான குற்றவாளியாக காணப்பட்டுள்ளார் என்பதுடன், மல்லாகம் நீதவான் நீதிமன்றில் 27இலட்சத்து 50ஆயிரம் பண மோசடியில் தேடப்படும் சந்தேக நபராகவும் உள்ளார்.

இந்த சந்தேக நபருக்கு எதிராக வவுனியா, மல்லாகம், யாழ்ப்பாணம் போன்ற நீதிமன்றில் 3 கோடியே 50ஆயிரம் பண மோசடி வழக்கு நிலுவையில் உள்ளது. இவருக்கு எதிராக குடிவரவு குடியகல்வு சட்டத்தின் பிரகாரம் வழக்கு பதிவு செய்து யாழ்ப்பணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது இவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிபதி ஆனந்தராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக குறி பண மோசடி சம்பந்தமான நூறுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியடசகர் லூசன் சூரியபண்டார தெரிவித்தார்.

(அ-01-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண சபை தேர்தல் நடத்தப்படவேண்டும்!

## வலியுறுத்துகின்றார் சித்தார்த்தன்



யாழ்ப்பாணம், நவ. 03

**“13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்கப்படவேண்டும்.”**

**- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.**

தென் பகுதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமான எஃப்ரேல் நிறுவனத்துக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று, சித்தார்த்தனின் இல்லத்தில் நடைபெற்றது.

இதில் 13ஆவது சீர்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்தும், அதனை நிறைவேற்றுவதில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இங்கு கருத்து வெளியிட்ட சித்தார்த்தன் -

13வது சீர்திருத்தமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண சபை தேர்தலானது நடத்தப்பட வேண்டும். அதில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

வடக்கில் வீதிகளையும், காணிகளையும் விடுவிப்பதாக கூறுகின்றனர். ஆனால் சில பகுதிகள் மாத்திரமே விடுவிக்கப்படுகின்றது. பெரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன. அந்தப் பகுதிகளும் விடுவிக்கப்படவேண்டும்.

நாங்கள் தேசிய கட்சியில் இணைந்து செயற்படவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. ஆனால் அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏற்ப சூழ்நிலைகள் அந்த கட்சிகளுக்குள் காணப்படவில்லை.

தமிழ் பௌத்தமானது தமிழ் பௌத்தமாகவே பேணப்பட்டிருந்தால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் பௌத்தர்களும் இருந்திருப்பார்கள். தமிழ் பௌத்த தொல்லியல் சின்னங்களும் பாதுகாக்கப்பட்டிருக்கும். ஆனால் தொல்லியல் திணைக்களமானது மக்களது காணிகளை அபகரிக்கும் ஒரு நிலையிலேயே காணப்படுகிறது. ஆகையால் தமிழ் பௌத்த சின்னங்கள் கூட அழிவடையக்கூடி சந்தர்ப்பம் காணப்படுகின்றது - என்றார்.

(அ)

# தேசிய மக்கள் சக்தியே தேர்தலில் வெற்றி பெறும்

## அடித்து கூறுகிறார் எஸ்.பி

கொழும்பு, நவ. 03

“எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்படவில்லை. பொதுத்தேர்தலில் அக்கட்சி இலகுவில் சாதாரணப் பெரும்பான்மை பலத்தை பெறும்.” - என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் போன்ற தேசிய மட்ட தேர்தல்களால் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் தொடர்பில் பெரிதாக கவனம் செலுத்தப்படவில்லை. அப்படி இருந்தும் தேசிய மக்கள் சக்திக்கு 15 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதனை பின்னடைவு எனக் கூறமுடியாது. முதலாம் இடத்தை பிடித்த கட்சிக்கும், இரண்டாம் இடத்தை பிடித்த கட்சிக்கும் இடையில் நிறைய வித்தியாசம் உள்ளது.

பொதுத்தேர்தல் என்பது தேசிய மட்ட தேர்தல். மக்கள் வாக்களிப்பதில் ஆர்வமாக உள்ளது. எனவே, தேசிய மக்கள் சக்தி சாதாரண பெரும்பான்மையை இலகுவில் பெறும். தேசிய மக்கள் சக்தியைவிட அக்கட்சியினருக்கு பின்னால் உள்ள கம்யூனிஸ்ட் சித்தாந்தம் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, அக்கட்சியினரால் நீண்ட பயணத்தை செல்ல முடியும் என நம்புகின்றேன்.

தேசிய மக்கள் சக்தியில் வாக்கு கேட்கும் எண்ணம் எனக்கு இல்லை. கிடைத்துள்ள மாற்றத்தை அவர்கள் சிறப்பாக முன்னெடுத்து செல்ல வேண்டும்-என்றார்.

# ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை!

கொழும்பு, நவ. 03

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகத் ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, வேதன முரண்பாடு உள்ளிட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு கோரி ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அண்மையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

ரயில் திணைக்களம் குறித்த பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதாகக் கூறுகின்ற போதிலும், வேறு சில காரணங்களினால் காலம் தாழ்த்தப்படும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் திங்கட்கிழமை உரிய தீர்வு முன்வைக்கப்படாவிடின், செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுக்க உள்ளதாகத் ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்துள்ளார்.

(அ)

# வீட்டு வளாகத்துக்குள் முதலை!



வவுனியா, நவ. 03

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வீட்டுவளாகத்திற்குள் முதலை ஒன்று வந்தமையால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வவுனியாவில் பருவமழை ஆரம்பித்துள்ளதுடன் கடந்தசில நாட்களாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.

இந்நிலையில் பூந்தோட்டம் பகுதியில் உள்ள காணி ஒன்றிற்குள் சுமார் நான்கடி நீளம் கொண்ட முதலை ஒன்று மாலைநேரம்உள்நுளைந்துள்ளது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளரால் பொலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிசார் குறித்த முதலையை அங்கிருந்து அகற்றியிருந்தனர்.

(அ-10)

# கராப்பிட்டிய வைத்தியர்களின் புறக்கணிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, நவ. 03

காலி கராபிட்டிய தேசிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று முன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்ட பணிப் புறக்கணிப்பை வைத்தியர்கள் கைவிட்டுள்ளனர்.

மேலும், இந்த பணிப்புறக்கணிப்பு சம்பவத்தையடுத்து சம்பந்தப்பட்ட வைத்தியர் வேறு வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார் என சுகாதார அமைச்சின் செயலாளர் அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து பணிப்புறக் கணிப்பு கைவிடப்பட்டுள்ளது.

முன்னதாக காலி - கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைத்தியர்கள் நேற்று 24 மணித்தியால அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வைத்தியர் ஒருவரினால் மற்றைய சில வைத்தியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில், வைத்தியர்கள் இன்று ஒரு நாள் அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.








இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org